விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

ங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 02 சனிக்கிழமை (16.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஜே.வி.பி. கூட்டத்தில் சூடு பெண் உட்பட இருவர் பலி

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை மாவட்டம் கட்டுவன ரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஜ.வி.பியின் கூட்டத்தில் இடம்பெற்ற துப் க்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் ட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 8.15 ற்கு இடம்பெற்ற இந்த ப்பாக்கிச் சூட்டில் தமது ஆதரவாளர்கள் ால்லப்பட்டதனை ஜே.வி.பியின் செய ளர் ரில்வின் சில்வா உறுதி செய்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர், அரசாங்க பாதுகாப்பு தரப்பின் துப்பாக்கிச் சூட் டிலே இவர்கள் மரணித்ததாக தெரிவித்துள்ளார்.

மேலும் காயமடைந்தவர் சிலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே அந்தக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த தருணத்தில் அங்கு மோட் டார் சைக்கிளில் வந்த இருவர் ரி-56 ரக துப் பாக்கியால் சரமாரியாக துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரி வித்துள்ள ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசநாயக்க அரசின் கையாட்களே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனர் என தெரிவித்துள்ளார். (ந-8;11)

## இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக இல்லை!

### வட பகுதியை பார்வையிட்ட இந்திய குழு பேட்டி

(சென்னை)

போவார்ட் பிளாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வருண் முகர்ஜி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் கதிரவன், போவார்ட் பிளாக் தேசிய செயலாளர் தேவராஜன் ஆகி யோர் சில தினங்களுக்கு முன் வன்னிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

அங்கிருந்து நேற்றுக் காலை விமானம் மூலம் சென்னை திரும்பிய அவர்கள், நேற்று கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் என்ன நடக்கின்றது என்ற உண்மை நிலையை கண்டறிய இலங்கை சென் றோம். அங்கு மூன்று நாட்கள் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால், கிளிநொச்சி, வவுனியா உள் ளிட்ட பல பகுதிகளைப் பார்வையிட்டோம்

அங்குள்ள முகாம்களில் உள்ள தமிழர் களைச் சந்தித்துப் பேசினோம். தமிழர்களின் நிலை இன்னும் மோசமாகத்தான் உள்ளது.

இலங்கையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தாவின் உத்தரவிலேயே பாலச்சந்திரன் படுகொலை



### லங்கா நியூஸ் வெப் தகவல்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் நேரடி உத்தரவின் பேரில் கொல்லப்பட்டதாக லங்கா நியூஸ் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கோத்தபாயவின் உத்தரவுக்கு அமைய இராணுவத்திடம் சரண ந்த பாலச்சந்திரன் 58ஆவது பிரிகேட் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவின் ற்பார்வையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## சவுதியில் சித்திரவதை 130 பணிப் பெண்கள் நாடு திரும்பினர்

சவுதிஅரேபியாவுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்ற பணிப்பெண்களில் 130 பேர் நேற்று வெள்ளிக்கிழமை நாடு திரும்பி னர் என்று இலங்கை வேலைவாய்ப்பு பணி யகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்று அந் நாட்டு (19ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரம் மேம்படும்

நாணயத்தின் பெறுமதி குறைவடையும் நிலையிலும் இலங்கையின் பொருளாதா ரம் மேம்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரி வித்துள்ளது.

உலகளாவிய ரீதியாக நாடுகள் பொருளா தார பின்னடைவுகளை சந்தித்து வருவத னால் நாணயத்தின் பெறுமதி ஸ்திரத்தன் மையற்ற (19ஆம் பக்கம் பார்க்க)

## அதிகார பலத்தை அடைய வாக்காளராக பதியுங்கள்



### கடமை என்கிறார் மாவை

(யாழ்ப்பாணம்)

உரிமைகளைப் பெற்றுக் கொள்ள ஒவ்வொரு தமிழ்க் குடி மகனும் வாக்காளராக தம்மை பதிவு செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடு[illegible]ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமிழ் மக்களின் குடிசன எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்து வருகிறது. பாக 1983 ஆம் ஆண்டின் பின் இனக்கலவரங்கள் மற்றும் உள்நாட்டுப் போர் காரண இந்தியா உட்பட ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளில் பல (20ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை சீர்குலைக்கும் மகிந்த அரசைக் கவிழ்ப்போம்!

### மிக விரைவில் என்கிறது ஐ.தே.க



நாட்டின் நீதியையும், சமாதானத்தையும் சீர்குலைக்கும் கொடூரச் செயல்களை மகிந்த அரசு அரங்கேற்றி வருகின்றது. நாட்டில் நீதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தத் துடிக்கின்ற அரச தரப்பிலுள்ள அமைச்சர்களையும் எம்மு டன் இணைத்துக் கொண்டு மகிந்த அரசை ஆட்சியிலிருந்து கவிழ்ப்போம். அந்தக் காலம் வெகுதொலைவில் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எச்சரித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவடை யும்போது, உள்நாட்டில் அதன் விலையைக் குறைக்க முடி யாத மகிந்த அரசு எதற்காக ஆட்சியில் இருக்க வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸவிடமும், அரசிடமும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் கேள்வி எழுப்பியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ...ஜைகளின் உரிமையை ...திக்கும் நாடு பிரிட்டன்

பிரிட்டனில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ... எதிரான ஆர்ப்பாட்டங்களைத் தடுப்ப ..., பிரித்தானிய சட்ட அமுலாக்க அதிகாரி ... தவறிவிட்டனர் என்ற குற்றச்சாட்டு குறி ... கருத்து கேட்டபோது, ஆர்ப்பாட்டம் செய் ... தனது பிரஜைகளுக்குள்ள உரிமையை ... மதிப்பதாக பிரித்தானிய உயர்ஸ்தானி ... லய பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இராச்சிய பிரஜைகளின் ஆர்ப் ...டத்திற்கான சட்டபூர்வமான உரிமையை ... மதிக்கிறோம், ஆனால் இது பேச்சு சுதந் ...த்திற்கான உரிமையுடன் சமநிலையாக ... ாளப்பட வேண்டும் என பிரித்தானிய ...ர்ஸ்தானி (19ஆம் பக்கம் பார்க்க)

## பெறாமகன் தாக்கியதில் பெரியதாய் உயிரிழப்பு!

### போதையால் வந்தது வினை

(யாழ்ப்பாணம்)

பெறாமகன் திருகுவலையால் தாக்கியதில் பெரிய தாய் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளார்.

வல்வெட்டித்துறை இத்தி செம்பாட்டு பகுதி யில் உள்ள குறித்த தாயின் வீட்டிலேயே இத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அருணாச்சலம் சின்னக்கண்டு (வயது 85) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கடந்த சில நாட்களுக்கு முன்பு வெளிநாட்டில் இருந்து வருகைதந்த குறித்த தாயின் பெறாமகன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் ஆவார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் பெறா மகன் சுயநினைவு இல்லாத நிலையில் தனது பெரியதாயினை திருகுவலையால் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தகவலை அறிந்த வல்வெட்டித்துறை பொலி ஸார் குறித்த பெறாமகனை கைது செய்துள் ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் படங்களை வைத்திருக்கலாம்!

இலங்கை அரச படையினருக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த மாவீரர்களின் படங் களை பெற்றோர்கள் தங்கள் வீடுகளில் வைத்திருப்பதற்கு எவ்விதமான தடையும் இல்லை என கிளிநொச்சி மாவட்ட இராணு வத் தளபதி பிரிகேடியர் ரேணுகா ரொவல் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் முறிகண்டியில் நிலப் பிரச்சினை தொடர்பான சந்திப்பில் அப்பகுதி மக்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக த.தே.ம.மு. உடன் கைகோர்க்கிறது ஜ.ம.மு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயக பிரதேசங்களில் அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்த வுள்ள ஜனநாயக வழியிலான எதிர்ப்புப் போராட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் இரண்டு மணி வரை யாழ்.நகர பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள சோமசுந்தரப் புலவர் சிலை அருகில் நடைபெறவுள்ள இப்போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு தெரிவித்து அனை வரையும் கலந்து கொள்ளுமாறு ஜனநாயக மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

தமிழ்ப்பாரம்பரியபிரதேசகாணிநிலஅபகரிப்பு உட்பட அரசாங்கத்தின் அனைத்து மேலா திக்க செயற்றிட்டங்களுக்கும் எதிராக மக்களை அணிதிரட்டி ஜனநாயக ரீதியான போராட்டங் கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுதியான நீண்டகால நிலைப்பாடாகும் எனவும் அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## சாமி வாகனத் திருட்டு நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்.இந்துக் கோயில்களில் சாமி வாகனத்திருட்டில் ஈடுபட்ட வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் நான்கு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குறித்த திருட்டுக் கும்பலைச் சேந்த நால் வரிடமிருந்தும் யாழ். கொக்குவில் பொற்பதி விநாயகர் கோவில் மற்றும் கொண்டலடி விநாயகர் கோவில்களில் திருடப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சுவாமி வாக னங்கள், பித்தளையிலான சாமி சிலைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்.முலவைச் சந்தியில்உள்ள மரக் காலை ஒன்றில் கனரக வாகனம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பொலி ஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தக வலை அடுத்து இவை கண்டுபிடிக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## திருப்பணி தொடர்பில் அவசரக் கலந்துரையாடல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தின் திருப்பணி தொடர்பிலான அவசரக் கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக் கிழமை காலை 7 மணிக்கு ஆலய முன்ற லில் நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ந-6)

## வட-கிழக்கு மக்களுக்கு சிங்கள மொழி கற்பிப்பு

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லி ணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய வடக்குக்கிழக்கைச்சேர்ந்த மக்களுக்கு தேசிய மொழிகள் மற்றும் பயிற்சி நிறுவகத் தினால் சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் ஆலோசனைக்கு அமைய இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள் ளது.

வடக்கில் தமிழ் பேசும் உத்தியோகத்தர் களுக்கு சிங்கள மொழி கற்பிக்கப்படவுள் ளது. முதற்கட்டமாக வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்தப்பயிற்சி நடைபெறவுள்ளது.

இது பத்துநாள் விசேட பயிற்சித்திட்ட மாக நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது. (ந-8,11)

## ஹெரோயின் கடத்தியவருக்கு மரண தண்டனை

2கிலோ 257கிராம்ஹெரோயினை கடத்தி வந்து தன்வசம் வைத்திருந்த குற்றவாளிக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று முன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

சட்மா அதிபரால் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதுடன் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி பத்மன் சுரசேன குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குறித்த சந்தேகநபர் ஹெரோயினுடன் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

நீண்டகால விசாரணைகளின் பின் இவர்மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட் டுள்ளது. (ந-8,11)

## காரைநகர் பாலியல் வழக்கின் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் யுவதி பாலியல் வல்லுற வுக்குட்படுத்தப்பட்ட வழக்கில் இரு முஸ்லிம் சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக் கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் சந்தேக நபர்களும் குற்றவாளிகளா? என இனங் காண்பதற்காக அடையாள அணிவகுப்பிற்காக நேற்றுவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு ஊர்காவற்துறை நீதவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய முஸ்லிம் நபரினை பாதிக்கப்பட்ட யுவதி மிகச் சரியாக இனங் காட்டியிருந்தார்.

இதன்போது மன்றில் பாதிக்கப்பட்ட யுவதி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கே.சுகாஷ் குறித்த யுவதி குற்றவாளிகளினை மிகச் சரியாக இனங்காட்டியுள்ளார். வழக்கின் இரு சந்தேக நபர்களினை இனியும் மன்று பிணையில்செல்லஅனுமதித்தால்சாட்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்த வாய்ப்புண்டு.

கடந்த முறை குறித்த வழக்கு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது நிரம்பியிருந்த மகளிர் அமைப்புக்களினைச் சார்ந்த சில பெண் உறுப்பினர்களுக்கு இனிமேல் வழக்கு நடைபெறும் போது மன்றில் இருந்தால் சிக்கல் களினை எதிர்நோக்க வேண்டி வரும் என அச்சுறுத்தல் விடப்பட்டது.

குறித்த இரு சந்தேக நபர்களும் விளக் கமறியலில் இருக்கும் போதே இவ்வளவு தூரத்திற்கு சாட்சிகள் மீது தலையிடுகின்றனர் என்றால் அவர்களினை பிணையில் செல்ல அனுமதித்தால் சாட்சிகளுக்கு தீங்குகள் ஏற்பட வாய்ப்புண்டு என சட்டத்தரணி சுகாஷ் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் வழக்கினை விசாரணை செய்த ஊர்காவற்துறை நீதவான் ஆர்.எஸ் மகேந்திரராஜா குறித்த சந்தேக நபர்களினை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-4)

## அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அல்லாடுகிறது நாகர்கோவில் வித்தி.

### ஆசிரியர் பற்றாக்குறையும் அதில் ஓர் அங்கம்

(கரவெட்டி)

நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர் கள் அடிப்படை வசதிகள் இன்றி கொட்டகை களில் சொல்லொணா துன்பங்களை அனு பவித்து தமது கல்விச் செயற்பாடுகளை முன் னெடுத்து வருவதாக மாணவர்களின் பெற் றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பிரதேச மானது யுத்தம், சுனாமி அனர்த்தங்களை மிகவும் அதிகம் எதிர்கொண்ட பிரதேசமாகும்.

இதனால் அங்கிருந்த மக்கள் வடமராட்சி மற்றும் ஏனைய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப் பட்ட அப்பகுதி மக்கள் சிறு சிறு குடிசைகளில் அடிப்படை வசதிகள் இன்றியும் வாழ்வா தாரத்தை மேம்படுத்த முடியாமலும் வாழ்ந்து வருகின்றனர்.

இதில் ஒரு அங்கமாக நாகர்கோவில் மகா வித்தியாலயம் கொட்டகைகளில் அடிப்படை வசதிகள் இன்றி ஆசிரியர் பற்றாக்குறையுடன் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை 135 இற்கு மேற்பட்ட மாணவர்களுடன் சொல்லொணா துயரத்தை அனுபவித்து வருகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நாகர்கோவில் மகா வித்தியாலய அவல நிலையை கருத்திற் கொண்டு உதவ முன்வருவார்கள் என தாம் எதிர்பார்த்து நிற்பதாக பாடசாலை மாண வர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித் துள்ளனர். (ந-3,24)

## வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தென்பகுதி மீனவர்கள் முற்றுகை!

### 25 படகுகளில் கூட்டாக இறக்கம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியினை தென் பகுதி மீனவர்கள் முற்றுகையிட்டதாக அப் பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வடமராட்சிக் கடற்பகுதியில் அட்டைக் குளிப்பு, கடலுணவு போன்றவற்றை பிடிப் பதற்காக பெருமளவு தென்பகுதி மீனவர்கள் 25 படகுகளில் கடல்வழியாகவும், தரை வழியாகவும் வந்து முற்றுகையிட்டனர்.

இதனையறிந்த அப்பகுதி மீனவர்கள் இந் நடவடிக்கையை எதிர்த்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக அப்பகுதி இராணுவம், பொலிஸ் உயரதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து படையினரின் தலையீட்டி னால் தென்பகுதி மீனவர்கள் திருப்பி அனுப் பப்பட்டனர். இச்சம்பவம் வடமராட்சி கிழக்கில் கல்லாறு, தாழையடி போன்ற கடற்பகுதியி லேயே இடம்பெற்றுள்ளது. (ந-9,10)

## நயினை பாமாலை இசை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி பக்திப் பாமாலை இசை வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்ட பத்தில் நடைபெறவுள் ளது.

இதில் பிரதம விருந் தினராக வடமாகாண ஆளுநரின் செயலா ளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செய லாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாணகல்விப்பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர்கலந்து கொள்ள வுள்ளனர். (ந-6)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

சிவகார்த்திகேயன், ஆத்மியா மற்றும் பலர் நடிப்பில்




(22 முதல் கார்த்தியின் சகுனி)

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

விற்பனைக்கு

Boliro- மகேந்திரா மெக்ஷிறக் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

0771040986

(8651)

ELATE Computer Systems
King of Computer World

இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு! ஒரு வாரத்தில் Internet, Email Diploma தகுதியை பெற Internet, Email கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் விரிவுரையாற்றும் விரிவுரையாளரால் நடத்தப்பட உள்ளது

- Internet என்றால் என்ன? அறிமுகம்
- Email ஒன்றை உருவாக்குவது எப்படி? பயன்படுத்துவது எப்படி?
- வெளிநாடுகளில் உள்ள உறவுகளுடன் முகம் பார்த்து கதைப்பது எப்படி? Skype மற்றும் ஏனைய Messenger பற்றிய விரிவான பயிற்சி.



- Face book, T witter போன்ற சமூக வலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்துவது?
- இணையத்தில் இருந்து பாடல் அல்லது படம் ஒன்றை Download செய்வது எப்படி?
- Website ஒன்றை எவ்வாறு நாம் உருவாக்குவது?
- Dongle மற்றும் ஏனைய இணைப்புக்களை எவ்வாறு செயற்பட வைப்பது?

போன்ற பல தகவல்களுடன் அனைவரும் இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதுமான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே.

பிரிவு -I ஆரம்பம்: 17.06.2012 பி.ப. 4 மணி
பிரிவு - II ஆரம்பம்: 18.06.2012 பி.ப. 4 மணி

பயிற்சிக் கட்டணம் 1900/- மட்டுமே
பதிவுகளுக்கு முந்துங்கள்

- இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எமது நிறுவனத்தில் கற்பிக்கப்படும் ஏனைய பயிற்சி நெறிகளுக்கு 20% சலுகைக் கட்டணம் அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு Hotline - 0774384353

1048, K.K.S. Road, Jaffna. (சிவா ரயர் கடை முன்பாக)

(8647)

# இன்று ஒரு தகவல்

## ஆறு வகை பயம்.

"எதிர்காலத்தை நினைத்தால் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது சேர்!"

இப்படியாகச் சொல்லுகிறவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

பயப்படாத மனிதர்கள் யாருமே கிடையாது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயம். இருந்தாலும் ஒட்டு மொத்தமாக பார்க்கிறபோது மனிதனுக்கு ஆறு விதமான பய உணர்வுகள் வரலாம் எனப்பெரியோர்கள் கூறுகிறார்கள்.

எல்லாவிதமான பயமும் இந்த ஆறுவகைக்குள்ளே அடங்கும். அந்த ஆறுவகை பயமும் ஆறு எதிரிகள் மாதிரி.

ஆறு எதிரிகளையும் புரிந்து கொண்டால், போதும். வாழ்க்கையில் சுலபமாக வெற்றி அடைய முடியும்.

சரி, அந்த ஆறுவகை பயம் என்னவென்று பார்ப்போம்.

முதலில்... வறுமை பற்றிய பயம்.

இரண்டாவது... பழிச் சொல் தொடர்பான பயம்.

மூன்றாவது... உடல் நலம் பாதிப்பு பற்றிய பயம்.

நான்காவது... காதல் தோல்வி.

ஐந்தாவது... முதுமை.

ஆறாவது... மரணம்.

மனிதன் பயப்படுவது என்பது ஒரு மனநிலைதான். இந்த மனநிலையைக் கட்டுப்படுத்த முடியும். திசை மாற்ற முடியும்.

இந்த பயங்களின் அறிகுறிகள் எப்படி இருக்கும்?

முதலில் வறுமை பற்றிய பயத்தின் அறிகுறிகளைத் தெரிந்து கொள்வோம்.

எதிலேயும் அக்கறை இல்லாமல் இருப்பது. ஒரு குறிக்கோள் இல்லாமல் வாழ்வது வறுமையை சகித்துக் கொள்வது.

அதாவது, வாழ்க்கையில் கிடைப்பது எதுவாக இருந்தாலும் ஆட்சேபனையின்றி ஏற்றுக்கொள்வது.

மனதளவிலும் உடல் அளவிலும் சோர்ந்து போய் இருப்பது ஆர்வம், முனைப்பு, கற்பனைத் திறன் எதுவுமே இல்லாமல் இருப்பது.

இவை அனைத்தும் வறுமை பற்றிய பயத்தின் அறிகுறிகளாகும்.

அடுத்தது... பழிச்சொல் பற்றிய பயம்.

அதாவது அடுத்தவர்கள் நம்மைக்குறை சொல்லி விடுவார்களோ என்கிற பயம்.

இதற்கு அறிகுறி என்ன தெரியுமா?

புதியவர்களைச் சந்திக்கப் பயப்படுவது. முடிபு எடுக்க முடியாமல் குழம்புவது. பிரச்சினைகளைத் தவிர்க்க விரும்புவது.

தாழ்வு மனப்பான்மை... வரவுக்குமீறி செலவு செய்து ''இமேஜை'' உயர்த்திக்கொள்வது.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை. இவையெல்லாம் அதற்கு அறிகுறிகள்.

மூன்றாவது பயம்... உடல் நலம் பாதிப்பு பற்றிய பயம்.

அதாவது நோய் பற்றிய பயம்.

வைத்தியரை சந்திக்கிற மனிதர்களில் 75 சதவிகிதம் பேர் தங்களுக்கு நோய் வந்துவிட்டது என்ற கற்பனையில் இருப்பவர்கள்தான்.

இந்தப் பயத்தின் அறிகுறிகள் எவை தெரியுமா?

வியாதிக்கான அறிகுறிகள் தன்னிடம் இருப்பதாக நினைத்துக் கொள்வது.

எந்தநேரமும் வியாதியைப் பற்றியே பேசிப் பேசி மனதை அங்கேயே வைத்திருப்பது.

நோய் தொடர்பான செய்திகளைப் படித்து நமக்கு இப்படி ஆகிவிடுமோ என்று வேதனைப்படுவது.

இவைதான் அதன் அறிகுறிகளாகும்.

நான்காவது பயம்! காதல் தோல்வி பற்றிய பயம். இது மிகவும் வேதனையானது.

உடலையும் மனதையும் சீரழித்துவிடும்.

ஆண்களை விடப் பெண்கள்தான் இந்தப் பய உணர்வில் அதிகமாக பாதிக்கப்படுகிறவர்கள்.

ஐந்தாவது முதுமை புற்றி பயம்.

ஆறாவது மரணப்பயம்.

வயதான காலத்தில் எப்படி சமாளிப்பது?

சுதந்திரமாக- சுயமாகச் செயற்பட முடியாதே! என்ற நினைப்பு.

அதன்பின்னர் தான் மரணப் பயம். இது எல்லோருக்கும் பொதுவானது. தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

எனவேதான் இதை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் வேண்டும்.

இன்றைய இளைஞர், யுவதிகள் இந்த ஆறு வகை பயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சரியாகப் புரிந்து கொள்கிறபோது பயமும் தானாக விலகிச் சென்றுவிடும்.

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு இந்தப் பயங்கள் முட்டுக்கட்டையாக அமைந்துவிடக் கூடாது. உழைத்து பணம் சம்பாதித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இதேவேளை, மனதை உற்சாகமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

மனதை கட்டுப்படுத்தும் மார்க்கம் தெரிந்து கொண்டால் எல்லாம் சரியாக வந்துவிடும்.

ஒருவன் சொன்னான்; ''சேர்! எனக்கு வறுமை பற்றிய பயம்தான் இருந்தது. ஒரே இரவில் முப்பதாயிரம் ரூபாய் தயார் செய்து விட்டேன். இப்போது எனக்கு இன்னொரு பயம் ஆட்கொண்டு விட்டது''

"என்ன பயம்?"

"பொலிஸ் கண்டுபிடித்து விடுமோ" என்ற பயம் தான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருமுறிகண்டியில் 64 குடும்பங்களை சேர்ந்த 263 பேர் மீள்குடியேற்றம்

### எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறும் என்கிறார் முல்லை.அரச அதிபர்

(முல்லைத்தீவு)

யுத்தத்தால் இடம்பெயர்ந்த வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள திருமுறிகண்டி கிராம மக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை தமது சொந்த கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் இருந்து 27 குடும்பங்களை சேர்ந்த 97 பேரும் ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி நிலையத்தில் இருந்து 20 குடும்பங்களை சேர்ந்த 83 பேரும் மொத்தமாக 47 குடும்பங்களை சேர்ந்த 180 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்கள் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதியுதவியுடன் 4 பேருந்துகளில் 47 குடும்பங்களும் 6 பாரவூர்திகளில் அவர்களுடைய உடைமைகளும் எடுத்து வரப்பட்டு திருமுறிகண்டி இந்து தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு அன்றைய தினம் குடும்ப பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தமது சொந்த கிராமத்தில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இம்மக்களுக்கு எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் சமைத்த உணவு வழங்கப்படுமென முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேத நாயகன் அறிவித்துள்ளார். (அ-3-267)

# தேசிய கலைஇலக்கிய பேரவை மாநாடு இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பேரவையின் 39 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி தேசிய மாநாடு இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு தேசிய கலை இலக்கிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் முதலாம் நாளான இன்று காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை நிகழ்வுகள் நடைபெறும்.

இம்மாநாட்டில் பேரவையின் அங்கத்தவர் மாத்திரம் பங்கேற்க முடியும். பிற்பகல் 1.15 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை திரைக்காட்சிகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மாலை 4.15 மணி தொடக்கம் 4.45 மணிவரை கொழும்பு பேரவை வழங்கும் மக்கள் பாடல்கள் இடம்பெறும். மாலை 5 மணி தொடக்கம் 5.15 மணிவரை புதுவசந்தம் எனும் மலர் வெளியீடு நடைபெற்று மாலை 5.30 மணி தொடக்கம் 6.15 மணிவரை சங்காரம் ஆற்றுகை நிகழ்வு இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 9.30 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை நடைபெறும். கருத்தரங்குகள் யாவும் சி.தில்லைநாதன் தலைமையில் இடம்பெறும். இதற்கமைய பேரழிவு ஆயுதங்கள்- சந்திரலேகா, நுகர்வும் விரயமும்- சற்குருநாதன், போரை புறங்காணல்- ஸ்ரீ பிரகாஷ், நிலைக்கக்கூடிய வளர்ச்சி- விஜயகுமார் ஆகியோர் மேற்படி தலைப்பின் கீழ் கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1.15 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை திரைக்காட்சிகள் இடம்பெறும். அத்துடன் கவியரங்கம் வாழ்வை சந்தித்தல் எனும் தலைப்பில் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெறும். யாழ்.பிரதேச பேரவை வழங்கும் சுப்பற்றகொல்லை நாடகம் மாலை 5.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இடம் பெறும். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 115 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 100 | 80 | 160 |
| தக்காளி | 130 | 140 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | -- | 60 | 80 | 70 |
| கரட் | 100 | 160 | 100 | 160 |
| பூசணி | 40 | 50 | 30 | 40 |
| புடோல் | 50-60 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 40-50 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 100-120 | 120 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 105 | 100 | 100 | 110 |
| பாகற்காய் | 110 | 140 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 60-70 | 80 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 110 | 60 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 60-80 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 170 | 160 | 170 |
| முருங்கைக்காய் | 70 | 100 | 120 | 120 |
| போஞ்சி | -- | 160 | 130 | 180 |
| கத்தரிதம்புள்ள | 35 | 40 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 5 | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 150 | 70 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 16-20 |

## இராசி பலன்

16.06.2012
(ஆனி 02, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
துவாதசி பிற்பகல் 3.34 மணிவரை
பரணி மாலை 5.52 மணிவரை
இராகுகாலம் 8.53-10.23 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை
சித்தாமிர்தம்.

**மேடம்** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழிலை விரிவுபடுத்த கடினமாக உழைப்பீர்கள்.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், இடமாற்றச் சிந்தனை மேலோங்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் கூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், உறவினர் பகை மாறும், சிந்தித்து செயற்பட்டு சிறப்படையும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வேலைச்சுமை கூடும், ஏதாவது குறைகளுக்கு உட்பட நேரிடலாம், முயற்சிகள் தாமதமாகும், கௌரவக்குறைவான நாள்.

**துலாம்** சுற்றத்தார் வருகையால் சுகம் காண்பீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தொழிலில் அதிக பிரயாசை எடுப்பீர்கள், பண வரவு திருப்தி தரும், போட்டிகளில் வெற்றி காண்பீர்கள்.

**தனுசு** வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள புதிய வழி பிறக்கும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்.

**மகரம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், வாகன யோகம் உண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** சுதந்திரமாகச் செயற்படும் நாள், பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் கருத்துக்கு குடும்பத்தில் மதிப்பு கிடைக்கும், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

வள்ளுவன்

# வடமராட்சி தனியார் கல்வி நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்

## பருத்தித்துறை நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் அறிவிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி தனியார் கல்வி நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கு 18 விதிமுறைகளை கடைப்பிடிக்க உத்தரவிட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் பருத்தித்துறை மாவட்டநீதிமன்றில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதில் சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும்.

க.பொ.த. (உ/த) வகுப்பு மாண்வர்கள் எல்லாப் பாடங்களையும் எடுப்பதற்கு அனுமதி வழங்கலாம்.

தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் எல்லாப் பாடங்களையும் தமது நிறுவனத்தில் தான் எடுக்க வேண்டும் என மாணவர்களை கட்டுப்படுத்த முடியாது.

மாணவர்கள் விரும்பிய பாடத்தை விரும்பிய கல்வி நிறுவனத்தில் கற்பதை தடை செய்ய முடியாது.

பாடசாலை நாட்களில் காலையில் வகுப்பு வைக்க முடியாது.

கிழமையில் புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் வகுப்புக்கள் எதுவும் நடத்தக் கூடாது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு பின்புதான் வகுப்புக்கள் நடத்த வேண்டும். ஆயினும் க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர்களின் அனுமதிக் கட்டணம் 200 ரூபாவிற்கு மேல் பெறக் கூடாது.

இடம்பெயர்ந்த பிள்ளைகள் இலவசமாக படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அத்துடன் சிறுவர் இல்லத்தில் இருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கு இலவச அனுமதி அட்டையுடன் வகுப்புக்கு அனுமதிக்க வேண்டும். அதற்கு தற்துணிவு (சலுகை) வழங்க அனுமதிக்க வேண்டும்.

தனியார் கல்வி நிறுவனத்தை சுற்றி நடக்கும் பிரச்சினைகளுக்கு குறித்த கல்வி நிறுவன நிர்வாகி தான் பொறுப்பெடுக்க வேண்டும். அதாவது குறித்த கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கோ அல்லது கற்பிக்கும் ஆசிரியர்களுக்கோ குறித்த கல்வி நிறுவனத்திற்கு அருகில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமாயின் அது தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துவதற்கு நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் தமது நிறுவனத்தில் கற்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை படிப்பு, வரவு, நடத்தை மாணவர்களின் நிலை தொடர்பிலான முன்னேற்ற அறிக்கை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த கல்வி நிறுவன சுற்றாடலை சுத்தமாகவும் நுளம்புத் தொல்லை இல்லாமலும் வைத்திருக்க வேண்டும்.

குறித்த கல்வி நிறுவனத்தில் குடிநீர் வசதியும் தண்ணீர் வசதியுடனான மலசலகூட வசதியும் இருக்க வேண்டும்.

மாலை 6 மணிக்கு மேல் எந்த வகுப்புக்களையும் நடத்தக்கூடாது.

பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதாக இருந்தால் அவ் வகுப்புக்களில் இரண்டு பேருக்கு மேல் அனுமதிக்கக்கூடாது. அதற்கு மேல் மாணவர்களை அனுமதிப்பதாக இருந்தால் நகரசபை அல்லது பிரதேச சபையினரிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.


ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பரீட்சை வைத்தால் அந்தப் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்திக் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் ஒரு வகுப்பு எடுக்க முடியாது போய்விட்டால் அந்த வகுப்பை இன்னொரு நாளில் வைத்து ஈடு செய்ய வேண்டும்.

மாணவர்கள் விரும்பிய பாடத்தை விரும்பிய கல்வி நிறுவனத்தில் கற்பதால் ஆசிரியர்கள் போட்டியாக நடத்தும் வகுப்புக்களை எடுக்கக்கூடாது.

பாடசாலை தொடர்பான செயற்பாடுகளுக்கு இடையூறு இல்லாமல் வகுப்புக்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

வகுப்புக்களில் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை ஆரம்பக்கல்வி கற்கும் மாணவர்கள் 40, 6 ஆம் வகுப்பில் இருந்து க.பொ.த. (சா/த) வரையில் கல்வி கற்கும் மாணவர்கள் 50, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு எண்ணிக்கையில் கட்டுப்பாடு இல்லை.

இந்நடைமுறைகள் மூன்றாம் தவணையில் இருந்து அதாவது செப்டெம்பர் மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட போதும் இவற்றில் சில வற்றை அதாவது 3,4,7,8,9,11 ஆகிய தீர்மானங்களை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் அறிவித்துள்ளார். (அ-3-24)




வல்வெட்டித்துறை மக்கள் வங்கியின் ஏப்ரல் மாத ஜயஸ்ரீ வெற்றியாளருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் க. தர்மலிங்கம் வரவேற்கப்படுவதையும் வெற்றியாளர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.




## உங்களுக்குத் தெரியுமா? வலய மட்டப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உங்களுக்குத் தெரியுமா? வலய மட்டப்போட்டிகள்- 2012 இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய பருத்தித்துறை கல்விக் கோட்ட பாடசாலை மாண்வர்களுக்கான போட்டிகள் யா/ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையிலும் கரவெட்டி கல்விக்கோட்டத்திற்கான போட்டிகள் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் மருதங்கேணி கல்விக்கோட்டத்திற்கான போட்டிகள் யா/செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் நடைபெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2-9)

## நடமாடும் சேவை

வல்வெட்டித்துறை பொலிஸாரினால் நடமாடும் சேவை கம்பர்மலை வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும்.

இந்நடமாடும் சேவையின் போது முறைப்பாட்டு பதிவுகள், தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பன வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மருத்துவ சேவை, சுகாதார சேவைகள் என்பன நடைபெறவுள்ளன. எனவே இதில் பிரதேச மக்கள் அனைவரையும் தவறாது கலந்து பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

## பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

நெல்லியடி வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் வணிகர் கழகத் தலைவர் சி. அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் செயலாளர் இ. வரதீஸ்வரன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் பொ. வியாகேசு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது தீ விபத்துக்கு உள்ளான கடையுரிமையாளர்களுக்கு நிதி அன்பளிப்பு செய்யப்படவுள்ளது (அ-3-10-24)

## சடலமாக மீட்கப்பட்ட முதியவரின் மரணத்திற்கு மாரடைப்பே காரணம்

### மருத்துவ அறிக்கையில் தகவல்

வடமராட்சி உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் உள்ள பனை வளவில் சடலமாக மீட்கப்பட்ட வயோதிபர் மாரடைப்பால் மரணமானதாக பிரேத பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த வீரகத்தி சுப்பிரமணியம் (வயது-63) என்ற வயோதிபர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது சடலத்தை வல்வெட்டித்துறை பொலிஸார் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைத்தபோது வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாள் இச் சடலத்தின் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார்.

இதேவேளை குடும்பத்தினர் சந்தேகம் தெரிவித்ததையடுத்து மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தை புதைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-24)

## ஆவணத் திரைப்பட விழா

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் ஆவணத் திரைப்பட விழா-07 இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நோமான்ஸ் லான்ட், திரு திருமதி ஐயர் ஆகிய இரண்டு திரைப் படங்கள் திரையிடப்படவுள்ளன. இந்த இரண்டு திரைப்படங்களும் பல சர்வதேச திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளன.

இத்திரைப்படத்திற்கு ஆர்வலர்கள் மற்றும் ஊடகத்துறை மாணவர்கள் திரைப்பட விழாவில் பங்குபற்ற முடியும். அத்துடன் மேலதிக தகவல்களுக்கு 0212229873 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## சுற்றாடல் தினப்போட்டியில் இரண்டாமிடம்



(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தினப்போட்டியில் தேசிய ரீதியாக யாழ். சென். பெனடிக்றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவி செல்வி கருணாபாலன் கிறிஸ்ரினா இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

சுற்றாடல் அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து இவ்வருடத்திற்கான போட்டியை இம்மாதம் 5 ஆம் திகதி பத்தரமுல்லையில் நடத்தியது. இதில் தமிழ் மொழி மூலம் குறித்த மாணவி இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# சந்தேக நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ்.மேல் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினரின் போர்க்கால முன்னணி காவலரண்களுக்கு தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதான இளைஞனின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை முதலாம் வட்டாரத்தை சேர்ந்த பாஸ்கரன் வனஜன் (வயது 25)என்பவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலமே நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 12 ஆம் திகதி ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் இரு வருடங்களாக பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இவரிடமிருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஓர் சான்றாக வைத்து யாழ்.மேல் நீதிமன்றில் 2011 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 24 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர்ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இளைஞன் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம்.றெமீடியஸ், குறித்த நபரிடமிருந்து பெறப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் அவரை கட்டாயப்படுத்தியும் அச்சுறுத்தியுமே பெறப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிலையில் வழக்கை விசாரணை செய்த ஆணையாளர் குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் குறித்த நபரிடமிருந்து சுயமாக பெறப்படவில்லையென்றும் சட்ட வரையறைக்குள் காணப்படவில்லையென்றும் கூறி குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை நிராகரித்தார். மேலும் குறித்த இளைஞருக்கு எதிராகவேறு ஏதேனும் குற்றச்சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காகவும் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறுவதற்காகவும் வழக்கை அடுத்த மாதம் வரை ஒத்தி வைத்தார். (அ-4)

## இளையோருக்கான பயிற்சி வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினரால் பாடசாலை கல்வியை நிறைவு செய்து வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் கணனி, தையல் பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதற்கே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்குறித்த பயிற்சிகளைப் பெற விரும்பும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளை பளை முல்லையடியில் உள்ள பேரவை அலுவலகத்தில் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தினை ஒப்படைக்குமாறு பேரவையினர் அறிவித்துள்ளனர்.

முன்னர் இதுபோன்ற பயிற்சிகள் இடம்பெற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

## டெங்கு காய்ச்சல் அதிகரிக்கும் அபாயம்

### சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் டெங்கு காய்ச்சலின் பாதிப்பால் சகல பிரதான வைத்தியசாலைகளிலும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் டெங்கு காய்ச்சலினால் 80 பேர் கொல்லப்பட்டதுடன் 14 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்கள் உரியமுறையில் பராமரிக்க்ப்படுவதில்லை என சுகாதார அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது.

டெங்கு நோயினால் அதிகளவில் பாடசாலை சிறுவர்களே பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாட்டில் நிலவி வரும் காலநிலையினால் டெங்கு காய்ச்சல் ஏற்படக்கூடிய அபாயம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## கூட்டமைப்புக்கு எதிராக அநாமதேய துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

நாட்டை குழப்பியது அன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இன்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எனவும் கை, கால் உடைக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைப்போம் எனவும் மக்கள் முன் னணி என்ற அமைப்பினால் இந்தத் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இவ்வாறான துண்டுப்பிரசுரங்கள் மக்கள் முன்னணி என்ற அமைப்பினால் கடந்த காலங்களிலும் வெளியிடப்பட்டிருந்தன. (அ-6)


**வேலையாட்கள் தேவை**

முல்லைத்தீவில் இயங்கும் பிரபல உணவகத்திற்க்கு பின்வரும் வேலையாட்கள் உடன் தேவை.

1. உணவு பரிமாறுபவர்கள்
2. சமையலாளர்
3. ரொட்டி மேக்கர்

தொடர்புகளுக்கு:- 0775360958

(இ/276)

**வேலையாட்கள் தேவை**

டயர் கடைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-077 7498793

PKSB ரயர் வேர்க் சொப்
K.K.S. வீதி, இணுவில்.

(8649)

**இணுவில் கந்தசுவாமி கோயில்**
**மஹோற்சவம்**



இருபத்திரெண்டாம் திருவிழா (16.06.2012)

**இணுவையில் அமர்ந்து அருளுபவனே**

திருமாலின் மருகனே- வடிவேலா
திருப்பரங்குன்றம் அமர்ந்தவனே- வடிவேலா
குருவாய் தந்தைக்கு உபதேசித்தவனே -வடிவேலா
செருக்குற்ற சூரனை அழித்தவனே -வடிவேலா
இரு கன்னிகளை மணந்தவனே- வடிவேலா
கருணையே உருவானவனே -வடிவேலா
கருவறையில் கண் கொள்ளாக் காட்சி தருபவனே -வடிவேலா
விரும்பி இணுவையில் அமர்ந்து அருளுபவனே -வடிவேலா

விஜயன்.பிரவின்காந்
நாயன்மார்கட்டு

22ஆம் திருவிழா உபயகாரர்

(சி-081)


## மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

காரை-அரசடிக்காடு கதிர்காம வேலாயுத சுவாமி கோயிலின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பஞ்சவிம்சதி (25) கலச ஸ்நபன பூஜை நடை பெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை நடை பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)


**BCBS CAMPUS**

320,2nd floor, R.A. De Mel Mawatha,
Colombo-3.

UK / FRANCE STUDENT VISA
UK WORK / VISIT VISA
USA VISIT VISA .
NORWAY JOB SEEKING VISA
பெற்றுக் கொள்ள முடியும்

Degree & MBA Programs From UK Universities to Complete While Sri Lanka migration to Canada, Australia & Newzealand.

France Visa Can be Arranged

June 20 க்கு முன் பதிவுகளை மேற்கொண்டு இலவச விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுங்கள்

அழையுங்கள்:-

0112301691, 0772227393

# பெற்றோலிய கூ.தா. அனைத்தையும் கணனிமயப்படுத்துவதற்கு திட்டம்

## சிரேஷ்ட பணிப்பாளர் விஜய குணரத்தின தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள சகல பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களையும் கணனிமயப்படுத்த திட்டமிட்டுள்ளதோடு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நவீன வசதிகளுடன் இயந்திரங்கள் பொறுத்தப்படவுள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் விஜய குணரத்தின தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று நேற்றைய் தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடமாக இவ்வாறான ஒன்றுகூடலை எம்மால் இங்கு நடத்த முடியவில்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது.


எதிர்காலத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சேவைகள் விஸ்தரிப்பு செய்யப்படவுள்ளன.

அத்தோடு நவீன வசதிகளுடன் கூடிய இயந்திரங்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொறுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் மூலம் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலுள்ள பிரச்சினைகள், பாவனையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காணப்படும்.

மேலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கணனிமயப்படுத்தப்பட்டு தரவுகள் பேணப்படவுள்ளன. இதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை இந்தப் பயிற்சிப்பட்டறை நிகழ்வில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பந்துல சமரசிங்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் என். சண்முகநாதன், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சமிந்த சமரக்கோன் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)



உயிர்காக்கும் குருதிக்கொடையாளர் கழகத்தின் இரண்டாவது இரத்ததான நிகழ்வு உரும்பிராய் சென். மைக்கல் தேவாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் இரத்த தான முகாம் இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

# உ/த மாணவர் ஒன்றிய ஒன்றுகூடல் நிகழ்வு

யா/ காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் ஒன்றுகூடலும் *மதி* சஞ்சிகை வெளியீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

சிவநாதன் கோகிலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய அதிபர் கா.குமாரவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலமைந்துள்ள பன்றிக் கோட்டு விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் தினமும் மாலை 6 மணிக்கு விநாயகர் புராணம் எனும் தலைப்பில் சைவப் புலவர் பொன். சுகந்தன் சிறப்பு தொடர் சொற்பொழிவினை ஆற்றவுள்ளார். (அ-9)

(பருத்தித்துறை)

நெல்லியடி கிழக்கு கரவெட்டி புதுத்தோட்டம் ஸ்ரீ விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆனி உத்தர திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

(அ-9-10)

# திரையரங்குகளில் டிஜிட்டல் முறையை அனுமதிப்பதற்கு சட்டத்திருத்தம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள திரையரங்குகளில் டிஜிட்டல் முறைமையை அனுமதிக்கும் வகையில் அரச திரைப்படக் கூட்டுத்தாபன சட்டம் திருத்தப்படும் என அக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் பரீட்சார்த்தமாக 10 திரையரங்குகளில் டிஜிட்டல் முறைமையை பயன்படுத்த அனுமதிக்கப்படும் என இலங்கை திரைப்படக் கூட்டுத் தாபன தலைவர் அசோகா சேரசிங்க கூறியுள்ளார்.

தற்போது பயன்படுத்தப்படும் முறைகள் காலம் கடந்தவை. அதுமட்டுமன்றி மிக அதிகளவான மின்சாரத்தையும் இந்த முறைமைகளில் பயன்படுத்த வேண்டும். அத்துடன் படச்சுருள்களை கொண்டு வருவதற்காக பெருமளவு கப்பல் செலவும் ஏற்படுகின்றது. டிஜிட்டல் முறையில் படத்தை காண்பிப்பதற்கு ஒருவர் மாத்திரம் இருந்தால் போதுமானதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் முறையே இப்போது உலகெங்கும் உள்ளதால் இன்னும் சிறிது காலத்தில் அனலொக் முறை வழக்கொழிந்து விடும். இலங்கை நீண்ட காலத்துக்கு முன்னரே இந்த முறைமைக்கு மாறியிருக்க வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# தபாலில் போதைப் பொருள் அனுப்பிய விவகாரம்;இருவருக்கு விளக்கமறியல்

தபால் மூலம் ஹஷிஸ் போதைப்பொருள் அனுப்பப்பட்டமை தொடர்பாக கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் கண்காணிப்பு கமராவில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் அடங்கிய வீடியோவை பாதுகாப்பாக பேணுமாறு ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் தபால் அத்தியட்சகருக்கும் கொழும்பு கோட்டை நீத வான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜைகள் இருவர் உட்பட மூவரையும் ஜூன் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்தியாவிலிருந்து போதைப்பொருள் கடத்தியதாக பிரித்தானிய பிரஜைகளான புருட்டன் சோல் பொலிக்ஸ் மற்றும் ஜோஸ் கேர் வில்டன் ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து மேற்படி பொதியை வெளியே எடுப்பதற்காக போலி ஆவணங்களை தயாரித்ததாக இலங்கையர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)

# கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் கியூபாவுடன் ஒப்பந்தம்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கியூபா விஜயத்தின் போது கியூபாவுடன் கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் ஒப்பந்தம் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பதில் வெளிவிவகார அமைச்சர் டியூ. குணசேகர முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்திற்கும் கியூபா சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பான ராவுல் ரோவா கார்சியா நிறுவனத்திற்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கியூபாவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளன.

இதேவேளை கங்கேரியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அரசியல் பொருளாதார, வர்த்தக , நீதி , விவசாயம் , கலாசாரம் , தொழில்நுட்பம் , விஞ்ஞான ஒத்துழைப்பு தொடர்பிலான விடயங்கள் தொடர்பில் வருடாந்தம் மீளாய்வு செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடவும் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

மேலும் ஓமானில் பணி புரியும் சுமார் 25 ஆயிரம் இலங்கையர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் அவர்களது சேமநலன்களை கவனிக்கவும் என ஓமானுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (அ-2)

# செயலமர்வு

(பூநகரி)

கிளிநொச்சி கல்வி வல யத்தின் ஜி.ஐ.சற்., ஈ.எஸ்.சி. செயற்றிட்டத்தின் கீழ் தரம் 6 முதல் 9 வரையான இடைநிலை வகுப்புக்களில் இரண் டாவது தேசிய மொழியை கற்பிக்கும் ஆசிரியர்களுக் கான 2 ஆம் கட்ட செயலம ர்வு எதிர்வரும் 22, 23, 25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் கீழ் முன்னோடிப்பாடசாலைகளான 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அதன் ஆசிரியர்களுக்கே இச்செயமர்வு தற்போது இடம்பெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7-84)


# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலை யத்தின் 68 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததான நிகழ்வு மேற்படி நிலையத்தில் இடம்பெறும் என செயலாளர் செ.தனுஜன் அறிவித்துள்ளார். (அ-2)

# ஆனி மாத இராசி பலன்

## 15.06.2012 - 15.07.2012



## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**கல்யாண வாய்ப்புக்கள் கைகூடும்!**

**கவர்ச்சியாகப் பேசி காரியங்களை சாதித்துக் காட்டும் மிதுன இராசி நேயர்களே!**

சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று சொல்பவர்கள் நீங்கள். கற்றவர்களுக்கு மத்தியில் உங்கள் அனுபவத்தைச் சொல்லும்பொழுது, அனைவரும் ஆச்சரியப்படுவர். கோபம் வரும்பொழுது படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிவிடுவீர்கள். குணத்தோடு பேசும்பொழுது, நீங்கள் காட்டும் அன்பிற்கு ஈடு இணையில்லை.

உங்களுக்கு இந்த ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் புதன் இராசியிலேயே இருப்பது யோகம் தான். அதோடு, சகாய ஸ்தானதிபதி சூரியனும் சேர்ந்திருப்பதால் எடுக்கும் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிட்டும். அஷ்டமாதிபதி சனி வக்ர இயக்கத்தில் இருக்கும் வரை அதிர்ஷ்ட வாய்ப்புகள் அடுக்கடுக்காக வந்து கொண்டே இருக்கும்.

அது வக்ர நிவர்த்தியான பின்னால் வழிபாட்டில் கவனம் செலுத்தினால் தான், வளர்ச்சியைக் கூட்டிச் கொள்ள இயலும். செவ்வாயும், சனியுடன் இந்த மாதத்தில் சேரப்போகிறது. இது அவ்வளவு நல்லதல்ல. சுகஸ்தானத்தில் இரண்டும் ஒன்று கூடுவதால், சுகங்களும், சந்தோஷங்களும் எதிர்பார்த்த அளவு கிடைக்குமா? என்பது சந்தேகம் தான்.

இக்காலத்தில் வாகனங்களில் செல்லும்பொழுது அதிக விழிப்புணர்ச்சி தேவை. குடும்பப் பிரச்சினையும் அதிகரிக்கலாம். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்காதிருக்க, கூட்டாளிகளிடம் எச்சரிக்கையோடு இருப்பதும் நல்லது. உங்கள் சுய ஜாதகத்தை ஆராய்ச்சி செய்து பாக்ய ஸ்தானத்திற்கு பலன் கொடுக்கும் கிரகத்திற்குரிய தெய்வத்தை தேர்ந்தெடுத்து பரிகாரங்களைச் செய்வது நல்லது.

**கடக புதனும், கன்னிச்சனியின் வக்ர நிவர்த்தியும்!**

ஜூன் 21 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் 2 இல் சஞ்சரிக்கும் பொழுது, தனவரவு திருப்தியாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். நான்காமிடத்திற்கும் புதன் அதிபதியாக இருப்பதால், தாய் வழியில் தன இலாபம் கிடைக்கும். தக்க சமயத்தில் கைகொடுத்து உதவாத உறவினர்கள்கூட இப்பொழுது உதவி செய்ய முன்வருவர்.

அதே நாளில் சனியும் வக்ர நிவர்த்தியாவதால் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. அர்த்தாஷ்டமச் சனியின் அதிக்கம் வலுக்கிறது. இருப்பினும் நீங்கள் செய்த புண்ணியம் சனியின் மீது குருவின் பார்வை பதிகிறது. எனவே, மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்.

# மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகிவிடும்

**கன்னி இராசியில் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 23 ஆம்திகதி முதல் கன்னி இராசிக்குள் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறது. அங்கு வக்ர நிவர்த்தியான சனியோடு இணைகிறார். குரு பார்வையோடு அந்த இடம் புனிதமடைந்தாலும்கூட, சுகஸ்தானம் ஓரளவு வலிமை இழக்கத்தான் செய்கிறது. எனவே, ஆரோக்கியத் தில் அச்சுறுத்தல் ஏற்பட்டால், மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது.


சகோதரவழி பகை அதிகரிக் கலாம். வாகன மாற்றம் செய்வது உத்தமம்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஜூலை 11 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். 1, 4 க்கு அதிபதி வக்ரம் பெறுவதால், சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இம்மாதம் பெருமாளை வழிபட்டு பெருமைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

இம்மாதம் குடும்பச் சுமை கூடும் மாதமாக அமைகிறது. கொடுக்கல், வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்காதிருக்க, குடும்பத்தில் மூத்தவர்களிடம் ஆலோசனை பெறுவது நல்லது. ஜூன் 23 க்கு மேல் சுய ஜாதக ரீதியாக வழிபாட்டை தேர்ந்தெடுத்து செய்தால்தான் வருமானமும் திருப்திதரும். மன அமைதி கிட்டும். வியாழன் தோறும் தென்முகக் கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும், உடனிருப்பவரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். இடமாற்றங்கள் செய்யும் எண்ணத்தை தள்ளி வைப்பது நல்லது.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்,**

**புதிய திருப்பங்கள் உருவாகும்!**

**சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற கடக இராசி நேயர்களே!**

சாஸ்திர சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நீங்கள். ஒருவரைக் கண்ணால் பார்த்தவுடனேயே எடை போட்டுவிடுவீர்கள். எல்லோரும் போற்றும் வண்ணம் ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இளமையிலேயே உங்களுக்கு உருவாகும். மக்கள் சக்தி உங்களிடம் அதிகம் இருப்பதால், மற்றவர்கள் உங்களிடம் பழக்கம் வைத்துக்கொள்ள பிரியப்படுவர். நிதானம் மட்டும் உங்களுக்கு இருந்தால், நீடித்த வெற்றி உங்களுக்குக் கிடைக்கும்.

உங்களுக்கு இந்த ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தின் தொடக்கத்தில் சந்திரன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால், பொருளாதார நிலை மேலோங்கி இருக்கும். இலாபம் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே வந்துசேரும். அஷ்டமாதிபதி சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் நன்மைதான் என்றாலும், சப்தமாதிபதியாக சனி விளங்குவதால் குடும்பப் பிரச்சினைகள் மீண்டும் தலையெடுக்கலாம்.

கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். அந்நிய தேச வாய்ப்புகளும் அதற்கான முயற்சிகளும் கைகூடும் யோகங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். எண்ணிய காரியங்கள் எளிதில் நடக்க இறை வழிபாடு உங்களுக்கு கைகொடுக்கும். விரயஸ்தானத்தில் விரையாதிபதி தனாதிபதியுடன் கூடி இம்மாதம் தொட்க்கம் அமைவதால், விரயங்கள் அதிகரிக்கும் மாதமாகவே இம்மாதத்தைக் கருதலாம். இருப்பினும் வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் சுபவிரயமாக மாற்றிக் கொண்டால் வீண்விரயங்களிலிருந்து விடுபட இயலும்.

**கடக புதனும், கன்னிச்சனியின் வக்ர நிவர்த்தியும்!**

ஜூன் 21 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அதே திகதியில் சனியும் வக்ர நிவர்த்தியாகிறார். இதன் விளைவாக தேவைப்படும் நேரத்தில் பணம் வந்து கொண்டோ இருக்கும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடக்கும். சொந்தபந்தங்களின் பகை மாற உங்கள் அனுசரிப்புத் தன்மைதான் அதிகம் தேவை.

# பொருளாதார நிலை மேலோங்கும் எதிர்பார்த்ததிலும் அதிக இலாயம் கிட்டும்

சனியின் வக்ர நிவர்த்தி ஒரு வழிக்கு உங்களுக்கு நன்மையே கொடுக்கும், என்றாலும் 3 இல் சனி பலம் பெறுவதால், முன்னேற்றப் பாதிப்புகள் இடையிடையே வந்து சேரும். மாற்று இனத்தவர் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர்.

**கன்னி இராசியில் செவ்வாயின் சஞ்சாரம்!**

கன்னி இராசியில் செவ்வாய் ஜூன் 23 ஆம் திகதியில் சஞ்சரிக்கப் போகிறார். அது சனியோடு இணைவது அவ்வளவு நல்லதல்ல. சனி-செவ்வாய் சேர்க்கைக் காலம் கவனத்தோடு இருக்க வேண்டிய காலமாகும். குறிப்பாக அரசு வழித் தொல்லைகளும், அருகில் இருப்போரால் அமைதி இழப்பும் ஏற்படும். உடன்பிறப்புகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் தான். வாங்கிய இடத்தை விற்க வேண்டியநிலை ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். புதிய பொறுப்புகளும், பதவிகளும் ஒரு சிலருக்கு கிடைக்கும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**


ஜூலை 11 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக திடீர் இடமாற்றம், ஊர்மாற்றம், நாடுமாற்றம் ஒரு சிலருக்கு ஏற்படலாம். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் முன்பு, சுயஜாதகத்தையும் ஒருமுறை பார்த்துக் கொள்ளுங்கள். பொதுவாக விரயாதிபதி வக்ரம் அடையும்போது நல்ல வாய்ப்புகள் வந்து சேரும்.

இந்த மாதம் இலாபஸ்தானத்தில் இருக்கும் குருவை பலப்படுத்த தென்முகக் கடவுளை சிவாலயத்திற்கு சென்று வழிபட்டு வாருங்கள்.

இம்மாதம் தாய்வழி ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கும். தடைகள் அகலும். புதிய நட்பு ஒன்றின் மூலமாக பொருளாதார வளர்ச்சியைக் காண்பீர்கள். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். மாதத்தின் முற்பகுதியை காட்டிலும், பிற்பகுதியில் கணவன்-மனைவிக்குள் கனவு கூடும். எதிரியாக இருந்த சகோதரர்கள் இணங்கி வருவர். உதிரி வருமானங்கள் உடன் இருப்பவர் மூலமும் கிடைக்கும். உங்கள் குழந்தையின் மூலமும் கிடைக்கும். அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். நடராஜர் வழிபாடு நன்மையைத் தரும்.

(தொடரும்)

# யாழ்.சிறைச்சாலையில் கைவினை பயிற்சி ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலை தண்டனைக் கைதிகளுக்கான பனம் பொருள் உற்பத்தி கைத் தொழில் பயிற்சி நேற்று முன் தினம் யாழ். சிறைச்சாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி பயிற்சி 6 மாத காலத்தை கொண்டதோடு தெரிவு செய்யப்பட்ட ஆண், பெண் கைதிகளுக்கு மட்டுமே பயிற்சி வழங்கப்படுகின்றது.

சிறைச்சாலையில் இடப் பற்றாக்குறை காரணமாக தற்போது பெண் சிறைக் கூடங்களிலேயே இருபாலாருக்கும் சனி, ஞாயிறு தினங்களில் இப்பயிற்சி நடைபெறவுள்ளது.

கைதிகளுக்கான இப் பனம் பொருள் கைவினை பயிற்சியை பனை அபிவிருத்தி அதிகாரசபை வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சி தொடர்பாக யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் கருத்து தெரிவிக்கையில்,

கைதிகள் சிறையில் தண்டனை அனுபவிக்கும் காலங்களில் வெறுமனே காலத்தினை கழித்து தண்டனைக் காலம் முடிவடைந்து சிறையினை விட்டு வீடு செல்கையில் சுய தொழிலற்று, வருமானமற்று மீண்டும் குற்றங்கள் புரிய ஏதுவாகின்றது.

குற்றம் செய்தவர்கள் திருந்துவதற்காகச் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால், சிறைத்தண்டனையே அவர்களினை மீண்டும் குற்றவாளிகளாக்கி விடக்கூடாது.

அதனால்தான் நாம் யாழ்.சிறைச்சாலையில் இவ்வாறானதொரு கைத்தொழில் பயிற்சியியை ஆரம்பித்துள்ளோம்.

தண்டனைமுடிவடைந்து வெளியெ செல்லும் கைதிகள் இப்பயிற்சியை கொண்டு சுய தொழிலில் ஈடுபடமுடிவதோடு தமது பிள்ளைகளுக்கும் இதனை பயிற்றுவிக்க முடியும்.

இதுதவிர சிறையில் நடைபெறும் பயிற்சி வகுப்புக்களின்போது உற்பத்தி செய்யப்படுகின்ற கைவினைப் பொருட்கள் யாழ். மாநகர சபை முதல்வரின் அனுமதியுடன் யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக சந்தைப் படுத்தப்பட்டு அதில் வரும் வருமானத்தின் கூடிய பங்கு சிறைக்கைதிகளுக்கும் மிகுதிப்பங்கு யாழ். சிறைச்சாலை நலன்புரி கழகத்திற்கும் வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம், யாழ். நீதவான் மா.கணேசராசா, யாழ். சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எஸ்.இந்திரகுமார்,பனை அபிவிருத்தி சங்க தலைவர் பசுபதி சீவரத்தினம், பனை அபிவிருத்தி சங்க பதில் முகாமையாளர் கோபாலகிருஷ்ணன், பனை அபிவிருத்திச் சங்க பயிற்சி ஆசிரியர் சே. சிவராசா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(அ-2-4)

## நயினாமடுவில் மண் அகழ்வில் ஈடுபட்ட சீனர் உட்பட மூவர் கைதாகினர்

(பூந்தோட்டம்)

வவுனியா நெடுங்கேணி நயினாமடுவில் வனப் பிரதேசமாக ஒதுக்கப்பட்ட பகுதியில் சட்டவிரோத முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட சீன நிறுவனமொன்றின் உத்தியோகஸ்தர்களான சீனப் பெண் மற்றும் இரண்டு இலங்கை பிரஜைகள் வவுனியா வன வள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றது. கனரக வாகனங்கள் மூலம் மண் அகழ்வில் ஈடுபடுவதாக வன வள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்து வட்டார வனவள அதிகாரி க.யோகரத்தினம், பகுதி வன உத்தியோகஸ்தர்கள் ஈ.ஏ.என்.பிரேமதாச, அகேல குணரத்தின, குமார, பி.எம். திலகரத்தின, பி.பரமேஸ்வரன், எஸ்.எம். மஞ்சு, அபயசிங்க ஆகியோர் அடங்கிய குழுவினர் மேற்படி பிரதேசத்தில் திடீர் தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது மூவரை கைது செய்திருந்ததோடு மண் அகழ்விற்கு பயன்படுத்திய பக்கோ வாகனம் மற்றும் டிப்பர் என்பவற்றையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் அன்றைய தினம் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது சீன பிரஜை கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதுடன் இலங்கை பிரஜைகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட இரண்டு வாகனங்களும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் வாகனங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் உள்ளதெனவும் வனவள அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2-266)

## பொன்சேகாவை தளபதியாக நியமித்தமை அரசியல் தவறாகும்

### அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதைக் காட்டிலும் முதலில் முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா தம்மை திருத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எந்த விடயங்களிலும் அரசியல் தலையீடு உள்ளதாக சரத்பொன்சேகா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே சரத் பொன்சேகாவின் மருமகன் ஆயுத ஊழல் தொடர்பில் நீதிமன்றத்தினால் பிடியாணைக்கு உட்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவரை நீதிமன்றத்தில் ஒப்படைக்க சரத் பொன்சேகா முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சரத் பொன்சேகா இராணுவத்தில் இருந்து இளைப்பாறிய நிலையில் அவரை மீண்டும் இராணுவத்தளபதியாக நியமித்தமை அரசியல் தவறுதான் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கற்றல் அடைவு மேம்பாட்டின் அறைகூவல் குறித்த அமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அபிவிருத்தி மற்றும் கற்றல் அடைவு மேம்பாட்டின் அறை கூவல்களுக்கு முகங்கொடுத்தல் சம்பந்தமான அமர்வுகள் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆறுதல் பணிமனையில் நடைபெறவுள்ளது என பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா அறிவித்துள்ளார்.

இதில் அமர்வு-1 எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இடைநிலை வகுப்புக்களில் கணித, விஞ்ஞான பாடங்களில் மாணவர் அடைவின் செல்நெறி பற்றி யாழ்.வலயக்கல்விப் பணிமனை திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ். இரவீந்திரன், இடைநிலை வகுப்புக்களின் ஆங்கில பாடத்தில் மாணவர் அடைவின் செல்நெறி- யாழ்.பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.கே.கண்ணதாசன், ஆரம்ப வகுப்புக்களில் தமிழ்மொழித் தேர்ச்சியின் செல்றெி யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி செல்வி என். நல்லையா, 21 ஆம் நூற்றாண்டின் அறிவுசார் சமூக மாற்றத்திற்கு முன்பள்ளிகளின் வகிபங்கு வடமாகாண பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா ஆகியோர் மேற்படி தலைப்புக்களின் கீழ் உரை நிகழ்த்தவுள்ளனர்.

மாலை அமர்வு-2 பிற்பகல் ஒரு மணிக்கு வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமாகும். இதில் மாணவர் ஆளுமை விருத்தியில் இணைபாடவிதான செயற்பாடுகளின் வகிபங்கு- புளியங்குளம் ஆசிரியர் நிலைய முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன், கல்வி மேம்பாட்டிற்கு வேண்டிய மனித வளத்தின் வினைத்திறன் மிக்க முகாமையும் பயன்பாடும்- யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன், கல்வி மேம்பாட்டிற்கு வேண்டிய பௌதீக வளத்தின் வினைதிறன் மிக்க முகாமையும் அதன் பயன்பாடும்- வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வியின் மேம்பாட்டுக்கான கல்வி நடைமுறைகள், கல்விச் செயலொழுங்கு என்பனவற்றின் பொருத்தப்பாடு-ஆசியம் ஆசிரியர் தெ.மதுசூதனன் ஆகியோர் மேற்படி தலைப்பின் கீழ் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அமர்வு-3 மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பேராசிரியர் வி.பி.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கல்வி மேம்பாட்டில் சமய நிறுவனங்களின் வகிபங்கு-வைத்திய கலாநிதி எஸ்.ஜமுனானந்தா, கல்வி மேம்பாட்டில் ஊடகங்களின் வகிபங்கு- வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், கல்வி மேம்பாட்டில் சமூகம் சார் அமைப்புக்களின் வகிபங்கு- முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் என்.ஆனந்தராஜ் ஆகியோர் மேற்படி தலைப்பின் கீழ் கருத்துக்களை ஆற்றவுள்ளனர்.

அமர்வு-4 பிற்பகல் ஒரு மணிக்கு பேராசிரியர் க.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் அமர்வில் இடை நிலைக்கல்வி மேம்பாட்டில் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பங்கு- யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி, கல்வி மேம்பாட்டில் அதிபர்களது வகிபங்கு- யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி, கல்வி மேம்பாட்டில் ஆசிரியர்கள் வகிபங்கு- யூனியன் கல்லூரி ஆசிரியர் வே.சேந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களையும் முன்வைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2-7)

## திறப்புவிழாவும் மர நடுகையும்

(யாழ்ப்பாணம்)

பண்ணைச்சுற்றுவட்டத்திறப்புவிழாவும்மரநடுகையும்நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. (அ-9)

## மஹோற்சவம்

(சிவநகர்)

கிளி.குமரபுரம்-பரந்தன் அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

✧✧✧✧✧✧

முரசுமோட்டை சேற்றுக்கண்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பரத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9-254)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 159



கிழக்கு பிரஷ்யாவிலிருந்து ஜேர்மன் அகதிகள்-பெப்ரவரி1945

**கிழக்குப் பிரஷ்ய நடவடிக்கை...**

...நடவடிக்கையில் 14 காலாட் படை, 1 டாங்கிப் படை, 5 டாங்கி மற்றும் இயந்திரப்படைக் கோர்பஸ் கள், 2 வான் படைகள்- மொத்தமா கச் சுமார் 16 இலட்சத்து 70 ஆயிரம் நபர்கள், 25 ஆயிரத்து 426 சாதாரண் மற்றும் மார்டர் பீரங்கிகள், 3859 டாங்கிகள் மற்றும் தானியங்கிப் பீரங்கி அமைப்புகள், 3097 விமானங் கள் முதலியன- பங்கேற்றன.

ஜனவரி 13 ஆம் திகதி காலையில் சோவியத் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. ஏராளமான நீண்ட ால பீரங்கி சுடும் இடங்கள், மரத்தாலான பீரங்கி சுடுமிடங்களை ஏற்படுத்தி நன்கு பலப்படுத்தப்பட்ட தற் காப்பை ஆதாரமாகக் கொண்டு இயங்கிய எதிரியின் உறுதியான எதிர்ப்பாலும் மோசமான பருவ நிலையாலும் தற்காப்பின் நேரடி நடைமுறை மண்டலத்தைப் பிளந்து செல்வது இழுபறித் தன்மையைப் பெற்றது. 2-வது பைலோருஷ்ய சேனையில் இந்தத் தற்காப்பு மண்டலம் 2-3 நாட்களில் 3-வது பைலோருஷ்ய சேனையில் 5-6 நாட்களில் பிளக்கப்பட்டது. இப் பிளவை முற்றுப் பெறச் செய்வதற் காக சேனைகளின் தளபதிகள், சேமப்படைகளையும் மொபைல்



ஜெல்காவா வீதியல் போர்புரியும் சோவியத் வீரர்கள்

படைக் குழுக்களையும் மொபைல் சேனைக் குழுவையும் ஈடுபடுத்தினர். எதிரியும் தன்வசமிருந்த எல்லாச் சேமப் படைகளையும் பயன்படுத்தி னான்.

மேற்கொண்டு துருப்புகளின் தாக்குதல் வேகங்கள் நாளொன்றுக்கு துப்பாக்கிப் படை யூனிட்டுக்களுக்கு 15 கி.மீ. வரையும் டாங்கிப்படை யூனிட்டுகளுக்கு 22-26 கி.மீ. வரையும் அதிகரித்தன. இதனால் பெப்ரவரி 1 வாக்கில் சோவியத் துருப்புகளால் எதிரியின் கிழக்கு பிரஷ்ய படைத் திரட்டு முழுவதையும் சுற்றிவளைத்து ஹைல்ஸ்பெர்க் பகுதி கேனிக்ஸ் பெர்க் பகுதி, ஜெம்லாண்ட் பகுதி என்று 3 பகுதிகளாகப் பிரிக்க முடிந்தது. 2-வது பாசிச ஜேர்மனியப் படையின் ஒரு பகுதி சக்தியால் மட்டுமே கிழக்கு பொமரானியாவிற்கு பின்வாங்கிச் செல்ல முடிந்தது.

பெப்ரவரி 10-இலிருந்து 2-வது பைலோருஷ்ய சேனையின் பிரதான சக்திகள் கிழக்கு பொமெரானிய நடவடிக்கையைத் தொடங்கின. 3-வது பெலோருஷ்ய சேனை, 2-வது பைலோருஷ்ய சேனையிலிருந்து தனக்கு அளிக்கப்பட்ட 4 படைக ளோடும் 1-வது பால்டிக் சேனை யோடும் சேர்ந்து, படை மாற்றங்களுக் குப் பின் எதிரியின் கிழக்கு பிரஷ்ய படைத் திரட்டை அழித்தொழிப்பதில் இறங்கியது. எதிரியின் ஹைல்ஸ்பெர்க் படைத் திரட்டை 1945 மார்ச் 13 முதல் 29 வரையிலும் கேனிக்ஸ்பெர்க் படைத் திரட்டு ஏப்ரல் 6 முதல் 9 வரையிலும் ஜெம்லாண்ட் படைத் திரட்டு ஏப்ரல் 13 முதல் 25 வரையி லும் அழிக்கப்பட்டன.

கிழக்கு பிரஷ்ய நடவடிக்கையில் சுற்றி வளைக்கப்பட்டு பிரிக்கப்பட்ட எதிரியின் படைத் திரட்டுகள் ஒழிக்கப் பட்டதன் சிறப்பு அம்சங்கள் பின்வரு மாறு: முதலாவதாக இவையனைத்தும் நன்கு பலப்படுத்தப்பட்ட வட்டங் களில் இருந்தன. பெருமளவு பீரங்கி களைக் கொண்டிருந்தன. உள்போக்கு வரத்து மார்க்கங்களில் பரந்த அளவில் அங்குமிங்கும் செல்லும் நிலையில் இவை இருந்தன. அதே நேரத்தில் சோவியத் துருப்புகளுக்கு முந்தைய சண்டைகளில் பெரும் ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டிருந்தன, பொருளாயத சாதனங்கள் மற்றும் ஆயுதத்தளவாட இருப்புகள் கிட்டத் தட்ட முழுமையாகச் செலவிடப் பட்டிருந்தன. இரண்டாவதாக, சுற்றி வளைக்கப்பட்ட படைத் திரட்டுகளை ஒழித்துக் கட்டுவது நீண்டகால

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

கடுமையான சண்டைகளில் நிறை வேற்றப்பட்டது. இச்சண்டைகள் காடுகளும் சதுப்பு நிலங்களும் மிகுந்த இடங்களில் தாக்குதலுக்கு ஒவ்வாத பருவநிலைகளில் நடைபெற்றன. மேலும் இப்படைத் திரட்டுகள் கடல் பக்கத்திலிருந்து முழுமையாக முற்று கையிடப்பட்டது. மூன்றாவதாக, சுற்றிவளைக்கப்பட்ட துருப்புகளுடன் சேர்ந்து கொண்டு அவற்றுடன் தரைவழித் தொடர்பை ஏற்படுத்த முயன்ற எதிரியின் பலத்த பதில டிகளை சோவியத் துருப்புகள் முறி யடிக்க நேர்ந்தது. அபாயம் வந்த திசையில் சக்திகளையும் சாதனங் களையும் விரைவாக மாற்றியமைத் தால்தான் சோவியத் படைத் தலை மையால் முதலில் எதிரியைத் தடுத்து நிறுத்தவும் பின் நல்ல அடிகொடுத்து ஆரம்ப நிலைக்குப் பின்தள்ளவும் முடிந்தது. கேனிக்ஸ் பெர்கிற்கு மேற்கே மட்டுமே எதிரி வளைகுடாவின் ஓரமாகச் சிறு இடைவழியை ஏற் படுத்த முடிந்தது. இதுவும் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. திடீர் தாக்குதல் அணிகள், குழுக்களைப் பரவலாகப் பயன்படுத்தி நான்கு நாட்களில் எதிரியின் நீண்ட கால காப்பரண்களை அழித்து பின் கேனிக்ஸ்பெர்க்கில் இருந்த எதிரி யின் பாதுகாப்புச் சக்திகள் ஒழித்துக் கட்டப்பட்டன.

கேனிக்ஸ்பெர்கில் பாசிச ஜேர் மனியத் துருப்புகள் முறியடிக்கப் பட்டது, ஹிட்லருக்கு ஆத்திரமூட்டி யது. மூர்க்கமடைந்த ஹிட்லர், கோட்டையின் தலைவனாகிய ஜெனரல் லாஷுவிற்கு முன்கூட்டியே மரண தண்டனையளித்தான். 4-வது ஜேர்மனிய போர்க்களப் படையின் தளபதி ஜெனரல் மியூல்லர் பதவி நீக்கம் செய்யப்பட்டு அந்த இடத் திற்கு ஜெனரல் வான் ஸாவுகென் நியமிக்கப்பட்டான்.

செம்படை வீரர்கள் புகாரெஸ்ட்டில் வரவேற்கப்படுகின்றர்-ஆகஸ்ட் 1944




நடவடிக்கையில் பால்டிக் கப்பற் படை சிறப்பாகச் செயற்பட்டது. கண்ணிவெடிகள் இருந்த சிக்கலான சூழ்நிலையையும் மோசமான பருவ நிலையையும் பொருட்படுத்தாது, கப்பற்படையின் விமானங்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் டோர்பிடோ படகுகளும் எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை வெற்றிகரமாகத் தாக்கின, எதிரியின் சரக்கு போக்கு வரத்துகளைக் குலைத்தன. விமானப் படை மற்றும் சரக்கு போக்குவரத்து களைக் குலைத்தன. விமானப்படை மற்றும் கப்பற்படையின் பீரங்கித் தாக்குதல்களாலும் இறக்குப்படையை இறக்கியும் கப்பற்படை வீரர்கள் சோவியத் தரைப்படை துருப்புகளின் தாக்குதலுக்கு வழிகோலினர். ஆனால், தேவையான கப்பற்படை சக்திகள் இல்லாததால், கடலோரமாக நெருக்கப்பட்ட எதிரியின் படை திரட்டுக்களைக் கப்பற்படையால் முற்றிலுமாக முற்றுகையிட இயல வில்லை.

(தொடரும்)

# தென்னையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 20-II

வீட்டுக்கு ஆறு தென்னை மரமிருந்தால் வருடம் பூராகவும் ஒரு குடும்பத்துக்கு தேவையான தேங்காயை பெற்றுக்கொள்ளலாம். அந்தளவிற்கு மாறி மாறி வீட்டுத் தேவைக்கான தேங்காய்களின் தேவையை பூர்த்தி செய்திட முடியும். பிள்ளைக்கு கொடுப்பதை தென்னம் பிள்ளைக்கு கொடுத்தால் அது வளர்ந்து எமக்கு குடிப்பதற்கு இளநீரும் மறைப்பதற்கு ஓலையும் எரிக்க விறகும் அது இறந்து நாம் இளைப்பாற மரமுமாகும்.


ஆகையால் பெற்ற பிள்ளை பின்னாளில் கவனியாதிருக்கையில் அவசரத்திற்கு நட்ட தென்னை எமக்கு பயன் தருவதிலிருந்து தென்னையின் முக்கியத்துவத்தை அறியலாம். இதுவொரு பல்லாண்டு மரமாதலால் எந்த நேரத்திலும் ஏற்படும் பாதிப்பு இதனது முழு பயனையும் பெறவிடாது தடுத்துவிடும். மேலும் ஒரு மரத்தினது இழப்பு பாரிய நட்டத்தை ஏற்படுத்திவிடும். அதனால் தென்னையையும் நன்கு கவனித்து பராமரிப்பது அவசியம். இதன் மூலம் அதிலிருந்து அதியுச்ச பயன்பாட்டை பெறுவது சாத்தியமாகும்.

தென்னையில் பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகளையும் பற்றி முதலில் ஆராய்வோம். இத்தொடரை வாசிக்கும் போது உங்கள் வீட்டு தென்னை மரத்திலும் இங்கு குறிப்பிட்ட அறிகுறிகள் உள்ளனவா என அவதானியுங்கள். அவ்வாறாயின் அவ்வறிகுறிகளை மீண்டும் ஏற்படா வண்ணம் முன்னோடி நடவடிக்கைகளை வரமுன் காப்பது நல்லது எனும் வாக்குக்கிணங்க விரைந்து செய்தல் வேண்டும்.

ஒரு மரத்திற்கு அல்லது ஒரு வீட்டுக்கு மட்டும் செய்வதால் எந்தவித பயனும் ஏற்பட போவதில்லை. ஒரு பிரதேசத்திலுள்ள அனைத்து தென்னை மரங்களிலும் பீடை முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். ஆக இதுவொரு கூட்டு முயற்சி. ஒற்றுமை இங்கே முழுமையாக கடைப்பிடித்து அனைவரும் ஒன்றிணைந்தால் இதுபோன்ற பல்லாண்டு தாவரங்களை பீடை தாக்கத்திலிருந்து காப்பாற்ற முடியும். மாறாக எமக்குள்ளாக வேறுபாடுகளை வைத்திருந்தால் தென்னை மரத்தின் பீடைகளை கட்டுப்படுத்தவே இயலாது.

### தென்னையில் காண்டாமிருக வண்டு

தென்னை மரத்தின் வட்டு பகுதியை தூரத்திலிருந்து நோக்கும் போதே தென்னோலையில் V வடிவில் வெட்டப்பட்டு காணப்படுவதை இப்பூச்சிப்பீடையின் தாக்கம் இருப்பதை அறியலாம்.



நிறைவுடலி வண்டு தென்னையின் வட்டு பகுதியில் துளையிட்டு அதனூடாக உட்சென்று உருவாகும் குருத்திலைகளை உணவாகக் கொள்ளும். புதிதாக உருவாகும் ஓலைகள் மென்மையானதாக இருப்பதனால் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய இவ்வண்டினால் உருவாகும் இலைப் பகுதி வெட்டப்பட்டு உணவாக உட்கொள்ளப்படும். இங்கே நிறைவுடலியான வண்டினால் மட்டுமே சேதம் ஏற்படுத்தப்படுகின்றது.

நிறைவுடலி பெண்வண்டு முட்டைகளை கூட்டெரு அல்லது எரு குவியலாக குவிக்கப்பட்டிருக்கும் இடத்தில் இடும். முட்டை பொரித்து வெளிவரும் புழுப்பருவம் கூட்டெருவினுள்ளே அதனை உண்டு அளவில் விருத்தியடையும். வீடுகளிலோ அல்லது தோட்டங்களிலோ எருக்குவியலிலோ அல்லது விழுந்த, இறந்த தென்னைகளிலோ பல்கிப் பெருகித் தன்னினம் பெருக்கும். புழுப்பருவம் கூட்டுப்புழுவாகி நிறைவுடலியாக வெளிவந்து புதிதாக தென்னையில் சேதத்தை ஏற்படுத்தும்.

இவ்வண்டினது முன்பக்கம் காண்டாமிருகம் போல தோற்றமுள்ளதனால் இதனை காண்டமிருகவண்டு என அழைப்பர். கடினமான அளவில் பெரிய வண்டாக இருப்பதனாலும் தென்னையின் வட்டுப்பகுதியை அரித்து துளைத்து சேதத்தை ஏற்படுத்துகின்றது. துளையிடப்பட்ட பகுதியில் நார் போன்ற பொருட்கள் வெளித்தள்ளியிருப்பதை அவதானிக்கலாம். அதிகளவில் வண்டுகளின் சேதம் இருந்தால் அதன்மூலம் தென்னை மரம் பாதிப்படையும் என்பதனால் இவ்வண்டினை கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது.

இக்காண்டா மிருக வண்டினை Rhinoceros beetle எனவும் <u>Oryctes</u> <u>rhinoceros</u> எனவும் பெயரிட்டுள்ளனர். வண்டின் சேதத்தைக் குறைப்பதாயின் இதனது வாழிடத்தையும் இனம் பல்கிப் பெருகும் இடத்தையும் இல்லாதொழிக்க வேண்டும். இதற்கென கைதேர்ந்தவர்கள் நீண்ட ஊசியையே தென்னையின் வட்டு பகுதியில் உள்ள துளையினுள் செலுத்தி குத்தியிழுத்து அழிப்பர். இதனது இளம் பருவம் பெருகுகின்ற இடமான எருக்குவியலை குறிப்பிட்ட நாளுக்கொருமுறை பிரட்டிப்போடுதல் வேண்டும். இதன்மூலம் வண்டின் முட்டையிடும் பிரதேசம் கலைக்கப்பட்டிருப்பதுடன் இளம்பருவங்கள் வெளித்தெரியவும் அதன்மூலம் அவை பறவைகளினால் அழிக்கப்படவும் ஏதுவாகின்றது.

தென்னையின் வட்டுப்பகுதியினுள் மணல் மண்ணும் டிடிரி அல்லது மலத்தியோன் சேர்த்து இடுவதனாலும் நிறைவுடலியை அழிக்கலாம். நஞ்சுகலந்த மணல் மண் வண்டின் கழுத்துப் பகுதியில் அடைப்பதனால் அது கழுத்தை திருப்பமுடியாது இறக்கநேரிடும். காணிகளிலோ தோட்டங்களிலோ விழுந்திருக்கும் இறந்த தென்னை மரங்களை அகற்றிவிடுவது நல்லது. இதிலும் இவ்வண்டு பெருகவாய்ப்புள்ளது. தென்னந்தோட்டத்தை முடிந்தவரை சுத்தமாக வைத்திருப்பது நல்லது.

இவ்வண்டினைக் கட்டுப்படுத்தும் இயற்கையெதிரிகள் அதிகளவில் இன்மையால் இதனை முகாமைத்துவப்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும் இவ்வண்டினை வெளிச்சப் பொறி அல்லதுஉண்வுப் பொறியாக இலுப்பை அல்லது ஆமணக்கம் பிண்ணாக்கினை கூழ்போலக்கரைத்து 3 பங்கு நீருக்கு ஒரு பங்குபிண்ணாக்கென ஆக்கி அதனைத் தென்னந்தோட்டத்தில் பானையின் வாய் வெளியே தெரியும்படி வைத்தால் இதனது மணத்திற்கு கவரப்பட்டு நீரில் இறந்து மிதக்கும். இளம்பருவங்களை எருக்குவியலிலிருந்து மீட்டு அவற்றைக் கட்டுப்படுத்த இரசாயன பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தியும் கட்டுப்படுத்தலாம். சேதமாகியுள்ள பகுதிகள் ஒன்றிணைந்த கட்டுப்பாட்டு முறை மூலம் இதனை முகாமைத்துவப் படுத்த வாய்ப் புக்களுண்டு.

(வளரும்)

# பிரிட்டனின் புலனாய்வுப் பிரிவினர் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தவில்லை

## ஸ்கொட்லான்ட் யார்ட்டை சாடுகிறார் ஹெகலிய

(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக லண்டனில் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வுப்பிரிவு தவறியதாகவும் ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது எனவும் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல குற்றம் சுமத்தியுள்ளார்.**

கடந்த 6 ஆம் திகதி லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை ஸ்கொட்லான்ட் யார்ட் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது, பார்வையாளரைப் போன்று செயற்பட்டது.

அதிகமான தமிழ் இளைஞர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் நாட்டுக்கும் எதிராக நடைபெற்ற போராட்டத்தினை புலம்பெயர் தமிழர்கள் நீண்ட காலமாக திட்டமிட்டு மேற்கொண்டுள்ளனர்.

மக்களை கட்டுப்படுத்தல், குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல், புலனாய்வு நடவடிக்கை போன்றவற்றுக்கு ஸ்கொட்லான்ட் யார்ட் மிகவும் பிரசித்தி பெற்றது.

இவ்வாறான பின்னணியை உடைய புலனாய்வு பிரிவினரால் புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களினால் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளமையை முன்கூட்டியே அறியக் கிடைக்காமை ஆச்சரியமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.


துரதிர்ஷ்டவசமாக ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வு பிரிவினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

பிரித்தானியாவில் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதால் குறித்த ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் சட்ட ரீதியான அதிகாரம் ஸ்கொட்லான்ட் யார்ட் புலனாய்வு பிரிவினருக்கு காணப்படுகின்றது.

2000 ஆம் ஆண்டு பிரித்தானிய பயங்கரவாத சட்டத்தின் 13 ஆம் பிரிவின் அடிப்படையில் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கு பிரித்தானிய அரசாங்கம் வழங்கிய உபசரிப்பு பாராட்டுக்குரியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி மையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் நிதியை பாராளுமன்றத்தினால் கட்டுப்படுத்துவது தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக தமிழ்க் கல்வி மாநாடு

(கொழும்பு)

உலகெங்கும் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டியங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடத்தவுள்ள அனைத்துலக தமிழ்க் கல்வி மாநாடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24,25,26 ஆம் திகதிகளில் இந்தியாவின் பாண்டிச்சேரியில் நடைபெறும்.

மேற்படி மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகள் பாண்டிச்சேரியில் அமைந்துள்ள நியூபாரிஸ் மஹால் மண்டபத்திலும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் பாண்டிச்சேரி ஹோட்டல் ஜெயராமிலும் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் நியூ பாரிஸ் மஹால் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

உலகின் பலநாடுகளிலிருந்தும் பல கல்விமான்களும் அறிஞர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவுள்ள மேற்படி மூன்று நாட்கள் மாநாட்டில் சிறார்களுக்கு தமிழ்க்கல்வி மீதான ஆவலை ஏற்படுத்தக்கூடிய பல விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் இல்லாத நாடுகளுக்கு தமிழ் நாடு அரசின் உதவியோடு ஆசிரியர்களை அனுப்பி வைப்பது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தமிழ் நாடு முதல்வரிடம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பாண்டிச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி, இலங்கையிலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் பழ. நெடுமாறன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள் என்று கூறப்படுகின்றது.

(அ-2)

# திருமுழுக்கு யோவானின் வருடாந்த பெருவிழா

சுண்டிக்குழி புனித திருமுழுக்கு யோவான் பிறப்பு விழாவும் ஆலயத்தின் 124 ஆவது வருட பெருவிழாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு நவநாள் ஆயத்த வழிபாடுகள் நேற்றைய தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை வரை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு முதல் நன்மை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மறை உரைகளை அருட்பணி ஜெரோம் லெம்பேட் (அ.ம.தி) அடிகளார் ஆற்றவுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி நற்கருணை பெருவிழா இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலி யாழ். மறை மாவட்ட ஆயர் தலைமையில் நடைபெறும். திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து ஆலயத்தின் 125 ஆவது யூபிலி ஆண்டின் 24.06.2013 இன் பிரகடனம் ஆயர் தலைமையில் இடம்பெறும்.

எனவே அனைவரையும் நவநாள் வழிபாடுகளில் பங்கேற்று புனித திருமுழுக்கு யோவானின் ஆசியைப் பெறுமாறு பங்குத்தந்தை கேட்டுள்ளார்.

(அ-2)

# பிரிவுபசாரமும் வரவேற்பு நிகழ்வும்

கோப்பாய் தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் கிராம சேவையாளராக கடமையாற்றிய சி.உதயகுமார் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் யோ.கலைவாணி ஆகியோர் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

இவர்களுக்கான பிரிவு உபசாரமும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் தெற்கு மரியன்னை தேவாலய மண்டபத்தில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கி. தங்கவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ந.பிரதீபன், சிறப்பு விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர். அ.நிர்மலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இதன்போது கோப்பாய் தெற்கு கிராம சேவையாளராக கடமையேற்று இருக்கும் கே. பாலசுந்தரம், சமுர்த்தி உத்தியோகத்தர் குமுதினி மனோரஞ்சன் ஆகியோரை வரவேற்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(அ-7-134)

# உங்களுக்குத் தெரியுமா? வலயமட்டப் போட்டிகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் தரம் 10 மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ள உங்களுக்குத் தெரியுமா? வலயமட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட உங்களுக்குத் தெரியுமா? போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வலய மட்டப் போட்டிகளே நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் வவுனியா நகரக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் செட்டிக்குளம் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான எழுத்துப் பரீட்சை செட்டிக்குளம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

(அ-7-266)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.06 16

- ★ *1745-* பிரித்தானியர் கேப் பிறெட்டன் தீவை பிரெஞ்சுப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர். இது தற்போது கனடாவின் ஒரு பகுதியாகும்.
- ★ *1779-* ஸ்பெயின் பெரிய பிரித்தானியா மீது போரை அறிவித்தது. கிப்ரால்ட்டர் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- ★ *1819-* குஜராத்தில் இடம்பெற்ற 8.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் மாண்டனர்.
- ★ *1883-* இங்கிலாந்தில் விக்டோரியா அரங்கில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 183 சிறுவர்கள் உயிரிழந்தனர்.
- ★ *1897-* ஹவாய்க் குடியரசை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.
- ★ *1911-* விஸ்கொன்சின் மாநிலத்தில் 772 கிராம் விண்கல் வீழ்ந்ததில் களஞ்சியம் ஒன்று சேதமடைந்தது.
- ★ *1940-* லித்துவேனியாவில் கம்யூனிச ஆட்சி உருவானது.
- ★ *1963-* உலகின் முதலாவது பெண் விண்வெளி வீரர் ரஷ்யாவின் வலன்டீனா டெரெஷ்கோவா வஸ்தோக் 6 விண்கலத்தில் பயணமானார்.
- ★ *1976-* தென்னாபிரிக்காவில் சுவெட்டோவில் 15 ஆயிரம் கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 566 மாண வர்கள் உயிரிழந்தனர்.
- ★ *1964-* லியோனிட் பிரெஷ்னேவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.
- ★ *1983-* யூரி அந்திரோப்பொவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.
- ★ *1994-* சீன விமானம் TU- 154 புறப்பட்டு 10 நிமிடங்களில் வெடித்ததில் 160 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்பு**

- ★ *1971-* டுபாக் ஷகூர், அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்

**இறப்பு**

- ★ *1925-* சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1870)

# நிலத்திற்காக போராடும் முறிகண்டி மக்கள்

ஆனால், இவை வடக்குப் பிரசேத்தின் தமிழ் மக்களின் நிலத்திற்கு ஆபத்தானவை என்று மட்டும் தெரிகிறது. அங்கு போர் வீட்டுத் திட்டம் என்றபெயரில் சிங்களக்குடியேற்றம் செய்ய திட்டமிடப்பட்டிருப்பதாக சொல்லப்படுறது. நாலாயிரம் ஏக்கர் காணி நிலத்தில், போரால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் என்ற போர்வையில் அங்கு சிங்களவர்களை குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மக்களோ *எங்கள் அவலத்தை சிங்கள மக்களிடம் சொல்லுங்கள்* என்கிறார்கள். சிங்கள அரசோ சிங்கள மக்களை போரால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற பெயரில் தமிழர்களின் நிலத்தில் குடியேற்ற நிற்கிறது. போரால் பாதிக்கப்பட்டது யார்? இலங்கை அரசால் பாதிக்கப்பட்டது யார்? இந்த அவலங்களுக்கு என்ன முடிவு? எதற்காக சிங்கள மக்களை தமிழர் தாயகத்தில் குடியேற்ற வேண்டும்? ஈழத் தமிழினத்தை அவர்களின் தாயகத்திலிருந்து அகற்றவே இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெயர்வதுதான் எங்கள் நிலையாகிவிட்டது என்று நித்தியானந்தராசா யோகேஸ்வரி குறிப்பிட்டார். இவர் 1974 இல் யாழ்ப்பாணம் வடமராட்சியில் இருந்து முறிகண்டி கிழக்குப் பகுதிக்கு காணியொன்றை வாங்கிக் குடியேறியவர். தற்பொழுது தடுப்பு முகாமில் வசிக்கிறார். தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு முகாமில் பள்ளிகளுமில்லை, தங்களுடன் முறிகண்டி மேற்கைச்சேர்ந்த 46 குடும்பங்கள் அந்த முகாமில் வசிக்கின்றனர் எனவும் சொன்னார்.

எங்கள் கிராமத்தில் உள்ள தென்னை மரங்களை எல்லாம் இராணுவத்தினர் அழிக்கிறார்கள். நாங்கள் தாகம் தீர, நிழலிலாற வைத்த மரங்களை இவர்கள் ஏன் அழிக்கிறார்கள்? "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்" என்று 80 வயதான பாட்டி இராசம்மா சொன்னார். எல்லா காணிகளுக்கும் முன்பு அரசாங்கத்தால் *போமிட்* வழங்கப் பட்டுள்ளன. எங்கள் பாட்டிகள் பிள்ளைகளுடன் தென்னைகளையும் இழந்து வைத்தியசாலைக்கு அலைகிறார்கள். ஒரு இளநீர் குடிக்க முடியாது, தங்கள் முதுமைக் காலத்தில் அலைகிறார்கள். "எங்கள் நிலத்தின் விளைச்சலை நாங்கள் அனுபவிக்க முடியாதிருக்க இராணுவத்தினர் அவற்றை அழிக்கின்றனர்" என்று இராசம்மாவின் பேத்தி கூறினார்.


"காடுகளை அழித்து வீடாக்கிய கஷ்டம் எங்களுக்குத்தான் தெரியும்" என்று பெரும் குமுறலுடன் சொன்னார் செல்வலட்சுமி. அவர் முறிகண்டியின் மேற்குப்பகுதிக் கிராமத்தின் ஒருபகுதி உருவான கதையை விபரித்தார். "2003 இல் காடுகளை அழித்து கட்டை பிடுங்கி, பத்து லட்சம் செலவழித்து வீடு கட்டி, கிணறு மலசல கூடம் கட்டி, தோட்டம் அமைத்து இப்ப தடுப்பு முகாமில் இருக்கிறோம். யாரோ ஆட்களின் வீடுகளில் வசிக்கிறோம். எங்கள் காணிகளை பகிர்ந்தளித்து இவற்றைக் கிராமங்களாக்கிய பொழுது இமல்டா சுகுமார் அரச அதிபராகவும் சுபாசினி உதவி அரச அதிபராகவும் இருந்தார்கள்" என்பதோடு "இப்பொழுது எல்லாரும் பேசாமல் இருக்கிறார்கள்" என்றும் செல்வலட்சுமி குறிப்பிட்டார்.

யாரும் இந்த மக்களை வந்து பார்க்கலாம், யாரும் இந்த மக்களை வந்து கேட்கலாம் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சொல்லு þ ம்ோருக்குப் பின்னர் மக்களுக்கு வசந்தங்கள் பூத்து விட்டன. நல்லிணக்கம் திரும்பி விட்டது என்று சொல்லும் நிலையில் முறிகண்டி




மக்களின் நிலத்திற்கான குரல் சர்வதேச ஊடகங்கள் பலவற்றில் கூட ஒலித்துவிட்டன? இதுதான் வசந்தமா? இதுதான் நல்லிணக்கமா என்று யாரும் கேட்கவில்லை. ஆனால், இந்தமக்கள் அதை இடித்துரைத்துப் பேசுகிறார்கள். கடவுளைத் தவிர எல்லோருக்கும் கடிதம் எழுதிவிட்டோம் என்று இந்த மக்கள் சொன்னார்கள். ஈழத்தமிழ் மக்களுக்கு அவர்களின் இன்னல்களை தீர்ப்பதற்கு யாரும் இல்லை என்ற காலக்கொடுமையை இந்த மக்கள் குமுறலுடன் சொல்லுகிறார்கள்.

இந்த மக்கள் "எங்கள் நிலத்தை எங்களிடம் தாருங்கள் ஏன்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இரண்டு முறையும் ராஜபக்சவின் மகனும் எம்.பி.யும் ஆன- வன்னிக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்ளுபவருமாகிய -நாமலிடம் மூன்று தரம், மீள்குடியேற்ற அமைச்சர் வீரக்கோனிடம் நான்கு தரம், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் கருணா அம்மானிடம் மூன்றுதரம், வடக்கு மாகாண ஆளுநர்



முன்னாள் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியிடம் இரண்டுதரம், இந்திய வெளியுறவுச் செயலர் நிருபாமாவிடம் ஒருதரம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இருதரம், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் இருதரம் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் பலதரம் கேட்டுவிட்டோம். யாரும் எங்களுக்கு பதில் தரவில்லை" என்று இந்த மக்கள் சொல்லுகிறார்கள்.

இத்தனை தரப்புகளுக்கும் இத்தனை தரங்களுக்கும் என்ன நடந்தது? வெறும் அரசியல் சந்திப்புக்களாகவும் பிரசார நடவடிக்கைக்ளாகவும் இருந்ததே தவிர என்ன நடந்தது? வார்த்தைக்கு வார்த்தை இடத்திற்கு இடம் போருக்குப் பிந்தைய மக்களைப் பற்றி பேசுபவர்கள் இந்த மக்களின் வாழ்நிலத் துயரத்திற்கு ஏன் முடிவுகட்டவில்லை. இந்த மக்களின் துயரத்தை ஏன் புரிந்துகொள்ளவில்லை?

இராணுவத்தினர் சொல்லும் அதே வார்த்தையைத்தான் எல்லோருமே சொல்கிறார்கள். இந்த மக்கள் தங்கள் நிலமே தமக்கு வேண்டும் என்று கேட்ட பொழுது இது எங்கள் பாவனைக்கு வேண்டும் என்று இராணுவத்தினர் சொல்கின்றனர். உங்களுக்கு வேண்டுமானால், வேறு இடங்களில் காடு தருகிறோம் என்று சொல்கிறார்கள். வாழ்ந்த காணியைக் கேட்டால் காட்டை தருகிறோம் என்கிறார்கள். இப்பொழுது இந்த மக்கள் உள்ள நிலைமையில் அவர்கள் காட்டை வெட்டிக் குடியேற இயலுமா? அவர்கள் காடு மேடு எல்லாம் குடியேறிக் கொண்டு இந்த மக்களின் காணியைப் பிடுங்கிக் கொண்டு, மக்களைக் காடுவெட்டி குடியேறுங்கள் என்று சொல்வது எதற்காக?

இராணுவமும் உதவி அரச அதிபரும் கொக்காவிலில் உள்ள காட்டை அழித்து வீடு கட்டித் தருகிறோம் அங்கு சென்று குடியமருங்கள் என்று சொன்னதாக மக்கள் குறிப்பிட்டார்கள். தண்ணீர் வசதி இல்லாத, வாழக்கூடிய வசதி இல்லாத, இடத்தில் எப்படி வாழ்வது? இதற்காகவா இத்தனை வருஷம் கஷ்டப்பட்டு இத்தனை செலவழித்து காணியை பராமரித்தோம்? நாங்கள் எங்கட காணி வேண்டும் என்று செல்லுறம். அரசும் உங்கட காணி உங்களுக்குத்தான் என்று பிரசாரம் செய்யுது? நாங்கள் எங்கள் சொந்த நிலத்தை மீளப்பெறுவதற்காக-நிலப்பிச்சை கேட்டு இன்று அலைகிறோம் என்று கோபம் பொங்க மக்கள் பேசுகிறார்கள்.

## எங்கள் நிலத்தை......! எங்களிடம் தாருங்கள்!

இந்த மக்களின் விடயத்தில் இலங்கை அரசியல்வாதிகள் பல்வேறு வேடங்கள் தரித்து மக்களை ஏமாற்றுகிறார்கள். குறிப்பாக வன்னியில் பெரும் அரசியல் திட்டத்துடன் நுழைந்திருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச "நான் உங்கள் காணியை பெற்றுத்தர தயார் ஆனால், இராணுவம்தான் மறுக்கிறது" என்று சொல்கிறாராம். நாமல் ராஜபக்ச கிளிநொச்சியில் உள்ள பள்ளிகளுக்கு எல்லாம் சென்று தன்னுடைய புகைப் படமும் அரசியல் வார்த்தைகளும் பொறிக்கப்பட்ட பாடக் கொப்பிகளை கொடுத்து அதன் புகைப்படங்களை பத்திரிகைகளில் பிரசுரிக்கிறார். அவரது தந்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவோ நாடுமுழுவதும் இராணுவமயத்தை தீவிரப்படுத்துவேன் என்கிறார். இவர்கள் மாறி மாறி வேசமிட்டு அரசியல் செய்கையில் இந்த மக்களின் கண்ணீரை மிகவும் சாதாரணமாக் பார்ப்பதுடன் தங்கள் அரசியலுக்கு அதை பயன் படுத்துகிறார்கள்.

எந்த அரசியல் வாதியும் எங்கள் பிரச்சினையைத் தெரியாது என்று சொல்லக்கூடாது என்று இந்த மக்கள் சொல்லுகிறார்கள். சிங்கள, தமிழ், இந்திய அரசியல் வாதிகள் வரை எங்கள் பிரச்சினையை பேசிவிட்டோம். இங்குமிதிவெடி என்கிறார்கள். இங்கு ஒரு வெடியும் இல்லை. அத்துடன் மாற்றிடம் ஒன்றில் குடியேற நாங்கள் தயாரில்லை என்பதை தெளிவாகச் சொல்லி விட்டோம் என்கிறார்கள். எங்கள் போராட்டம் 3 வருடங்களாக நடக்கிறது என்று குமுறும் இந்த மக்கள், எல்லோரும் போலவே நாங்கள் வ்ாழ ஆசைப்படுகிறோம் என்று சொல்கிறார்கள். எங்கள் காணியை எங்களிடம் கையளிக்கவேண்டும் அரசு வாக்களித்ததை நிரூபிக்க வேண்டும் என்று உக்கிரத்துடன் பேசகிறார்கள்.

ஆறடி மண்ணுக்காக வாழ்ந்த தால் எங்கள் கண்களில் மண்ணை அள்ளி ஒரே அடியாக தூவிவிட்டார்கள் என்கிறார்கள் சனங்கள். நிலம் தொடர்பில் இந்த மக்களின் உக்கிர

தமிழ்மாறன்

மான வார்த்தைகளையும் கதைகளையும் கேட்கையில் சமகாலத்து ஈழத்து மக்களின் குரலாக இவர்கள் வலிமையோடு ஒலிக்கிறார்கள். போர் முடிந்து மூன்று ஆண்டுகளில் எங்கள் மக்களுக்கு என்ன நடந்தது என்ற தீராத துயரத்தின் சாட்சியாக இவர்கள் பேசுகிறார்கள்.

(தொடரும்)

# தரம் 9 மாகாணமட்ட பரீட்சையில் சமயபாடத்தையும் உள்ளடக்க வேண்டும்

## பாதிக்கப்பட்டவர்கள் கருத்து

(இராமநாதபுரம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட கல்வி வலயங்களிலிருந்து தரம் 9 மாகாணமட்ட பொதுப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை தயாரித்து வழங்குமாறு வடமாகாண கல்வித் திணைக்களம் கோரியிருந்தது.

இச்சுற்று நிருபத்தில் ஆறு முக்கிய பாடத் தொகுதிக்கான வினாத்தாள்களே குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் சமயபாடம்உள்ளடக்கப்படவில்லை.

மஹிந்த சிந்தனையின் பிரகாரம் சமயக்கல்வி பிரதானமாக்கப்பட்டுள்ள இந்நிலையில் வடக்கு மாகாண சபை கடந்த வருடமும் இவ் வருடமும் இந்த சமய பாடத்தை தவிர்த்தே மாகாண மட்ட பரீட்சையை நடாத்தி வருகின்றது. இப்பரீட்சையில் கணிதம், தமிழ்,விஞ்ஞானம், ஆங்கிலம்,வரலாறு ஆகியவையே உள்ளடங்கும். சமய பாடம் மட்டும் கல்வி வலயத்தால் நடத்தப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாட்டில் விழுமியம் சீர்குலைந்து செல்வதாக சொல்லப்படுகின்ற இன்றைய கால கட்டத்தில் சமயக்கல்வி புறக்கணிக்கப்படுவதானது மாணவர்களிடத்தில் மேலும் சமய விழுமியங்களில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி சீரழிவுக்கு வலுச்சேர்க்கும். எனவே, இது தொடர்பாக புத்திஜீவிகளும் சமயச்சான்றோர்களும் அதிகாரிகளும் உரிய முறையில் அக்கறையுடன் செயற்படுவது இன்றைய காலத்தின் அவசியமாகும். (அ-9-269)

# பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய காலைநேர பேருந்துசேவை இடைநிறுத்தம்

## மக்கள் அவதி

(பூநகரி)

பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி காலை 6 மணிக்கு புறப்படும் அரச பேருந்து சேவை கடந்த பல மாதங்களாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் காலை வேளை யாழ்ப்பாணத்திற்கு செல்லும் மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள், பல்வேறு தேவைகளுக்காக செல்லும் பொது மக்கள் என பலரும் பெரும் சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நேர விரயமும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே இவ்வாறான சிரம--ங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுமாறு உரிய தரப் பினரிடம் மக்கள் வேண் டுகோள் விடுக்கின்றனர். (அ-7-84)

# இந்தியாவின் பொருட்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படாது

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவதற்கான முனைப்பு மேற்கொள்ளப்படவில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் அடிப்படையிலேயே இலங்கைக்கான இந்தியாவின் இறக்குமதிகள் இடம் பெறுகின்றன.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து இறக்குமதிகளை கட்டுப்படுவத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் ஆலோசனைகளை அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்தார் என்று ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்காக சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் இது பொய்யான செய்தி என்று குறிப்பிட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்தியாவில் இருந்து பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# அரச பட்டாளம் கியூபா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாட்கள் பயணத்தை மேற்கொண்டு நேற்று காலை கியூபாவை வந்தடைந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருநாட்கள் (நேற்றும், இன்றும்) கியூபாவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி கியூபா தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்களை நடத்துவதோடு கியூபா ஜனாதிபதி ரவுல் கஸ்ரோவை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ரோவுடனான சந்திப்பு இடம்பெறுமா என்பது உறுதியாகவில்லை.

கியூபா விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரேசிலில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடைபெறும் ஐ.நாவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி குறித்த றியொ பிளஸ் 20 கருத்தரங்கில் பங்கேற்க றியோடி ஜெனீரோவுக்கு பயணம் செய்யவுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சர்கள் அனுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கியூபா சென்றுள்ளனர். (அ-2)

# இலங்கையர் குழு தமது நாட்டுக்குள் வருவதை தடுத்து நிறுத்தியது கனடா

(கொழும்பு)

தமது நாட்டில் சட்டவிரோதமாக அடைக்கலம் கோரவிருந்த மற்றும் ஒரு இலங்கையர் குழுவினர் கனடாவுக்குள் வருவதை கனடா தடுத்துள்ளதாக கனேடிய இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

148 பேரை கொண்ட இந்த இலங்கையர்கள் கனடாவுக்கு செல்லும் வழியில் மேற்கு ஆபிரிக்க நாடான பெனினில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று அனைவரும் உள்ளடங்கியிருந்த இந்த இலங்கையர்கள் நேற்று முன்தினம் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்நிலையில் இவர்களை பெனின் நாட்டில் வைத்து கைது செய்ய கனடாவின் புலனாய்வுப் பிரிவினரே முக்கிய பங்கை வகித்ததாக அந்த நாட்டின் குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னே தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 492 மற்றும் 76 என்ற தொகையின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் கனடாவில் அடைக்கலம் கோரியுள்ளனர். இவர்களின் விடயங்களை மிகவும் கவனமாக கையாண்டு வருகின்ற நிலையிலேயே பெனினில் வைத்து 148 இலங்கையர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் அவர்களை இலங்கைக்கு திருப்பியனுப்புவதன் மூலம் தமது நாட்டுக்கு அவர்களை வருவதை கனடா தடுத்துள்ளதாக கனேடிய இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# விசுவமடு குளத்தின் அணைக்கதவை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(றெட்பானா)

அணையின் கதவுகளை புனரமைப்பார் இன்றி வெளியேறிக் கொண்டிருக்கும் குளத்து நீரால் மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

விஸ்வமடு குளத்தின் அணையின் கதவில் ஏற்பட்ட பிளவு காரணமாக கடந்த சில நாட்களாக கட்டுப்பாடின்றி பெருமளவான நீர் வெளியேறிக் கொண்டிருக்கின்றது.

இந்நிலை தொடருமானால் குளத்து நீர்மட்டம் குறைவடைவதுடன் இக்குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகள், பண்ணையாளர்கள் ஆகியோர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என அச்சம் வெளியிடப்படுகிறது.

இவற்றை விட கட்டுப்பாடின்றி வெளியேறும் நீரினால் கால்வாய்கள் நிரம்பி வீதியின் குறுக்காகப் பாய்வதால் போக்குவரத்தில் சிரமம் ஏற்படுவதுடன் வீதியும் அரிப்புக்குள்ளாகும் நிலை காணப்படுகிறது.

தற்போது இவற்றை புனரமைப்பதற்கான இயந்திர தொழில்நுட்பமோ அல்லது ஆட்பலமோ பெற்றுக்கொள்ள முடியாத சிரமமான நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-3-260)

# கண்டி-குண்டகசாலை விவசாய கல்லூரியை மூடிவிட்டு விமான நிலையம் அமைக்க முயற்சி

## சோசலிச மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு


(கொழும்பு)

கண்டி-குண்டகசாலையிலுள்ள விவசாயக் கல்லூரியை மூடிவிட்டு அந்த இடத்தை சர்வதேச விமான நிலையமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக சோசலிச மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ் விவசாய கல்லூரி வளாகத்தில் திட்டமிடல் நடவடிக்கைகளை மே 8 ஆம் திகதி அதிகாரிகள் ஆரம்பித்ததாகவும் விமான நிலையத்திற்கான அடிக்கல் இம் மாதம் நடப்படவுள்ளதாகவும் அவ் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது 12 இலங்கை விவசாயக் கல்லூரிகளில் ஒன்றெனவும் ஆனால் தற்போது 5 விவசாய கல்லூரிகள் மாத்திரமே இயங்குகிறது. குண்டகசாலையிலுள்ள விவசாயக் கல்லூரி 100 வருடங்களுக்கு மேல் பழைமையானது. விவசாய நிபுணத்துவம் கொண்ட 91 தொகுதி மாணவர்களை அது தோற்றுவித்துள்ளது நாட்டின் விவசாயத் துறைக்கு இக்கல்லூரி அவசியமாகும்.

இந் நடவடிக்கையினால் நாட்டின் விவசாயக் கல்வியை கடுமையாக பாதிக்கும் என அச்சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-2)



உயர்கல்வி அமைச்சு பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவுடன் மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தக்கோரி யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் கோவிலில் நேற்று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு தேங்காய் உடைப்பில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

*(படம்:- உ.சாளீன்)*



# சிறுவர் அரங்கம்

132

## மரங்கொத்தியும் தேன்கூடும்



அண்ணன் நரியும் தம்பி நரியும் வழக்கம்போல விளையாடிக் கொண்டிருந்தார்கள். விளையாடிக்கொண்டே நீண்ட தூரம் போய்விட்டார்கள். அந்தக் காட்டுப் பகுதி மிகவும் அடர்த்தியாகவும் நீண்ட மரங்களைக் கொண்டதாகவும் காணப்பட்டது. இத்தகைய காடுகள் மழைக்காடுகள் என அழைக்கப்படுகின்றன.

ஒரு மரத்தின் கிளையில் மிகப் பெரிய தேன்கூடு காணப்பட்டது. அதைத் தம்பி நரி பார்த்துவிட்டது.

அண்ணா... அண்ணா... அந்தத் தேன் கூட்டிலிருந்து தேனைச் சாப்பிடணும்னு ஆசையா இருக்கு. தேனை எடுத்துத்தர்றியா?

இப்போது அண்ணன் நரி நிமிர்ந்து பார்த்தது. அந்தத் தேன்கூடு மிக உயரத்தில் இருந்தது. அந்தக் கூட்டைச் சுற்றிலும் தேனீக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

அது சாப்பிட நல்லா இருக்காதேடா. அதைப் போய் சாப்பிடணும்னு ஆசைப்படறியே.

அண்ணன் நரி சொன்னதை தம்பி நரி ஏற்றுக்கொள்ளவில்லை. தேனை சுவைத்தே ஆக வேண்டுமென்று அடம் பிடித்தது.

தம்பி நரியின் பிடிவாதம் அண்ணனை யோசிக்க வைத்தது.

அதை நம்மால எடுக்க முடியாதுடா தம்பி. ஏதாவது ஐடியா பண்ணித்தான் தேனைக் குடிக்கணும்.

சொல்லிக் கொண்டிருந்த போது ஒரு குரங்கு அந்தப்பகுதியில் தாவி வந்து கொண்டிருந்தது.

குரங்குப் பையா நீ எனக்கொரு உதவி செய்யணுமே.

உதவியா? என்ன செய்யணும்? சொல்லு முடிஞ்சா செய்யறேன்.

உன்னால நிச்சயம் முடியும். உன்னாலே முடியலேன்னா அது யாராலேயும் முடியாதுன்னு அர்த்தம்.

புகழ்ந்தால் குரங்கு மயங்கிவிடும் என்று நினைத்தது அண்ணன் நரி.

ஆனால், குரங்கு இதைப் புரிந்து கொண்டது.

சும்மா ஐஸ் வைக்காதே. விடயத்தைச் சொல்லு.

அந்த மரக்கிளையிலே ஒரு தேன்கூடு இருக்கு. அது கிட்டே போய் ஒரு குச்சியால குத்தி விடேன். தம்பி தேன் குடிக்கணும்னு ஆசைப் படறான்.

நீ எனக்கு ஐஸ் வெக்கறப்பவே நினைச்சேன். இது மாதிரி ஏதாவது செய்யச் சொல்லி என்னை நீ ஏதோ வம்பிலே மாட்டி விடுவேன்னு எனக்குத் தெரியும்.

ஆளை விடு. அந்த தேனீங்ககிட்டே மாட்டிக்கிட்டா அவ்வளவுதான். என் உடம்பு புண்ணாகிடும். உன் நட்பே எனக்கு வேணாம். நான் புறப்படறேன்.


அந்தக் குரங்கு விட்டால் போதுமென்று சொல்லாமல் கொள்ளாமல் அங்கிருந்து ஓடிப்போனது.

தம்பி நரி ஒரு யோசனை சொன்னது.

அண்ணா! ஒரு நீளமான கொம்பை எடுத்து அந்தத் தேனீக்களோட கூட்டைக் குத்திவிடேன்.

முடியாதுடா. அந்தக் கூடு ரொம்ப உயரத்திலே இருக்கு.

இரண்டு நரிகளும் இதுபோல மாறி மாறி யோசனை செய்தன. ஆனால், ஒரு யோசனையும் சரிப்பட்டு வரவில்லை.



அப்போது டொக் டொக் எனசத்தம்கேட்டது. இரண்டு நரிகளும் சத்தம் வந்த திசையை நோக்கிப் பார்த்தன. ஓர் அழகிய மரங்கொத்தி மரத்தைக் கொத்திக் கொண்டிருந்தது.

உடனே அண்ணன் நரி ஒரு திட்டம் தீட்டியது. அந்த மரங்கொத்தியைக் கூப்பிட்டது.

என்ன நரி எதுக்காக என்னைக் கூப்பிட்டே?

இன்னைக்கு நீ ரொம்ப அழகா இருக்கே. இதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.

நரியின் இந்தப் பாராட்டு மரங்கொத்திக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

என்னோட அழகைப் பார்த்து எல்லாரும் பொறாமைப்படறாங்க. ஆனா நீதான் என்னோட அழகை உண்மையா புகழறே. ரொம்ப நன்றி நரியே.

உண்மையைச் சொல்றதுலே என்ன இருக்கு. ஆமா காக்கையோட மூக்கை விட உன்னோட மூக்கு பலமானதா?

எதுக்குக் கேக்கறே?

நேத்து ஒரு காக்கை இங்க வந்திச்சு. அந்த மரக்கிளையில இருக்கிற தேன் கூட்டை கொத்திக் கொத்திப் பார்த்திச்சு. அதால ஒண்ணும் பண்ண முடியலை. எவ்வளவு கடினமான மரத்தையும் மரங்கொத்தி தன்னோட மூக்கால சுலபமா கொத்திடும். மரங்கொத்திக்கிட்டே உதவி கேளு. அதோட மூக்கு ரொம்ப பலமானது. அது உனக்கு உதவும்னு சொன்னேன். அதுக்கு அது அதோட மூக்கை விட என்னோட மூக்குப் பலமானது.

என்னாலேயே கொத்த முடியலை. மரங்கொத்தியால எப்படி முடியும்னு கிண்டலா சொல்லிட்டு போயிடுச்சு. அதான் கேட்டேன்.

அப்படியா சொல்லிச்சு அந்தக் காக்கை. இப்பவே அந்தக் கூட்டைக் கொத்தி என் மூக்கோட பலத்தை உனக்குக் காட்டறேன் பார்.


மரங்கொத்தி யோசிக்காமல் உடனே பறந்து சென்று தேன் கூட்டை தன் நீளமான மூக்கால் நான்கைந்து முறை கொத்தியது.

ஆத்திரமடைந்த தேனீக்கள் அந்த மரங்கொத்தியை சூழ்ந்து கொண்டு கொட்டின. வலியால் துடித்துப் போன மரங்கொத்தி வேகமாய் அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றது.

தேன் கூட்டிலிருந்து ஏராளமான தேன் கீழே கொட்டியது. தம்பி நரி தேனைச் சுவைக்க ஆரம்பித்தது.

## அம்புலி மாமா கதைகள்

## பகைவனை வெல்லச் சிறந்த வழி



மாசிடோனியாவின் மன்னரான ஃபிலிப் கி.மு. 382 முதல் 332 வரை வாழ்ந்த, சரித்திரப் புகழ்பெற்ற அலெக்சாண்டரின் தந்தை என்று மட்டுமே பலர் அறிவர். ஆனால், அவருடைய சிறந்த குணங்களை கீழ்க் கூறவிருக்கும் நிகழ்ச்சி மூலம் அறியலாம். மிகவும் பலம் பொருந்திய மன்னராக விளங்கிய ஃபிலிப் அறிவாற்றலிலும் சிறந்து விளங்கினார்.

தன் மகனும் தன்னைப் போல் திகழ வேண்டும் என்பதற்காக அரிஸ்ராட்டில் என்ற புகழ்பெற்ற தத்துவ மேதையை அவனுக்கு ஆசிரியராக நியமித்திருந்தார்.

அவருடைய சாம்ராச்சியத்தில் வசித்து வந்த ஒரு சிறிய ஜமீன்தாரான ஆர்க்கீடியஸ் என்பவர் மன்னரைப் பற்றி பலரிடமும் குறை கூறிக் கொண்டு திரிந்தார். இவ்வாறு அவர் செய்வது மன்னரின் செவிகளை எட்டியது. இதுபோன்ற குற்றங்கள் இராஜத்துரோகமாகக் கருதப்பட்டு வந்த காலம் அது.

ஒருமுறை மன்னர் அந்த ஜமீன்தார் ஆர்க்கீடியஸ் வசிக்கும் ஊருக்குச் சென்றிருந்தார். தன்னுடன் வந்த அரசாங்க அதிகாரிகளிடம், ஆர்க்கீடியஸ் என்னிடம் பகைமை பாராட்டி வருகிறார். அதற்கு இன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறேன்! என்று சூளுரைத்துவிட்டு, ஆர்க்கீடியஸை அழைத்து வர ஆள் அனுப்பினார்.

விடயம் தெரிந்த ஆர்க்கீடியஸ் பதறிப் போனார். தனது இராஜத்துரோகத்திற்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று அவருக்குத் தெரிந்தது. மரணதண்டனையே விதிக்கப்படலாம் என்று தோன்றியதால், தன் குடும்பத்தினரிடம் இறுதி விடைபெற்றுக் கொண்டு, மன்னரைக் காண வந்தார்.

ஆர்க்கீடியஸ் தன் அறையில் நுழைந்தவுடன், மன்னர் ஏனைய அதிகாரிகளை வெளியே அனுப்பி விட்டு, தனிமையில் அவரைச் சந்தித்தார். சற்று நேரத்தில் மன்னர் விதிக்கப்போகும் கடும் தண்டனையை நிறைவேற்ற காவல் வீரர்கள் தயாராக வெளியே காத்திருந்தனர்.

வெகு நேரமான பின்னர் ஒரு வழியாகக் கதவு திறந்தது. வெளியே வந்த மன்னரையும், ஆர்க்கீடியஸையும் கண்ட மற்றவர்கள் திகைத்துப் போயினர். இருவரும் சிரித்துக் கொண்டே கைகோர்த்துக் கொண்டு தோழமையுடன் வந்ததுதான் காரணம்! தன் அதிகாரிகளில் ஒருவரை அழைத்து ஆர்க்கீடியஸுக்குப் பரிசுகள் கொடுத்து அவரை வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு மன்னர் உத்தரவிட்டதும், யாருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

மகாராஜா! பகைவனை இன்றோடு ஒழித்துக் கட்டுவேன் என்று சொன்னீர்கள் அல்லவா? என்று ஆச்சரியத்துடன் கேட்டனர்.



ஆமாம்! நான் சொன்னபடியே பகைவனை ஒழித்துக் கட்டிவிட்டேன்! என்ற மன்னர் தொடர்ந்து, பகைவனை ஒழித்தது மட்டுமன்றி அவனிடத்தில் ஒரு புதிய நண்பனையே உருவாக்கி விட்டேன்! ஆர்க்கீடியஸ் ஒரு நல்ல மனிதர். என்னைப் பற்றி தவறாகப் புரிந்து கொண்டிருந்ததால் என்மேல் பலரிடமும் புகார் கூறிக் கொண்டிருந்தார். இன்று அவரிடம் நேரில் பேசி எங்களிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகளைப் போக்கி விட்டேன். என்னைப் பற்றி சரியாகப் புரிந்து கொண்டவுடன் அவருக்கு என்னிடம் இருந்த பகைமை நீங்கி நட்பு தோன்றி விட்டது என்றார்.

தொடர்ந்து, பகைவனை அழிப்பது என்றால் பகைமையை அழிப்பது என்று தான், பகைவனைக் கொல்வதல்ல! அப்படிச் செய்வதால் பகைமை அழியாது. தொடரும்! என்றார். மன்னரின் விளக்கம் அனைவரையும் பிரமிக்க வைத்தது.

ஒரு பகைவனை வெல்ல சிறந்த வழி தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவனை அழிப்பதல்ல! மாறாக, அவனிடம் மனம் விட்டுப் பேசி, அவனைத் தனது நண்பனாக்குவதே! என்று உலகத்தோருக்கு இதன் மூலம் மன்னர் எடுத்துக் காட்டினார்.

# Sri Lanka Isles International University
# @
# NORTH LANKA IIT வழங்கும்
# மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2012

விண்ணப்ப முடிவுத் திகதி 01–07–2012

## விண்ணப்பித்துவிட்டீர்களா?

### Courses


**B.Sc. in Computer Science**
Duration: 03 Years (O/L), 02 Years (A/L), 01 Year (HND)

**B.Com. with Computer Application**
Duration: 03 Years (O/L), 02 Years (A/L), 01 Year (HND)

**Post Graduate Diploma in Comp. Sc. >> M. Sc.**
Duration: 01 Year (Any Degree)

**MBA >> DBA**
Duration: 01 Year

வெல்லுங்கள்! 10 % முதல் 70 % வரை கற்கைநெறிக் கட்டணம் Free!



NORTH LANKA IIT நிறுவனத்திற்கான வாழ்த்துச் செய்தியை NORTH LANKA IIT செனற் சபை சார்பாக வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்!!

வட இலங்கை மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த யுத்த சூழ்நிலை அவர்களது கல்வியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டது. இந் நிலையை மாற்றியமைக்க அரசும் புத்திஜீவிகளும் முயன்று வரும் இவ் வேளையில் எமது மாணவர்களுக்கு தரமான கல்விச்சேவையை வழங்க முன்வந்திருக்கும் நிறுவனமே NORTH LANKA IIT ஆகும். சர்வதேச பல்கலைக்கழகமான Isles International University என்பதுடன் இணைந்து பட்டப்படிப்பை முன்னெடுக்க இந் நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கை எல்லோராலும் வரவேற்கப்படுதல் வேண்டும்.

இந் நிறுவனம் ஏற்கனவே கணினி விஞ்ஞானத்தில் (B. Sc. In Computer Science) பட்டப்படிப்பை பெறுவதற்கு பல மாணவர்களுக்கு வழிகாட்டியுள்ளது. இப்பொழுது B.Com. with Computer Application என்கின்ற வணிகக் கற்கைநெறியையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதே போல் M. Sc., MBA போன்ற பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. சர்வதேச பல்கலைக்கழகத்திலிருந்து இப் பட்டங்களை எடுத்துக்கொள்ள இந் நிறுவனம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை வடபகுதி மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.

இந் நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. அருள். பாலசுப்பிரமணியம் அவர்கள் வெளிநாடுகளில் இருந்து பல பட்டங்களைப் பெற்றுக்கொண்டவராகும். அவரது வழிநடாத்தலில் வளர்ந்துவரும் NORTH LANKA IIT நிறுவனம் எதிர்காலத்தின் கல்வியுலகில் சாதனை படைத்துப் பெரும் பிரபல்யத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கும் புலமைப் பரிசில் திட்டம் வறிய மாணவர்களையும் பட்டதாரிகளாக மாற்ற வகைசெய்யும்.. "திறமையும் வறுமையும் ஓரிடத்தில் நிறைந்திருக்கும்" என்ற சான்றோர் நம்பிக்கையை நடைமுறைப்படுத்த NORTH LANKA IIT நிறுவனத்தின் புலமைப் பரிசில் திட்டம் வகைசெய்யும். இவர்களது புலமைப் பரிசிலைப் பெற்று வட பிராந்திய மாணவர்கள் நன்மையடைய வேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன் இந் நிறுவனத்திற்கான எனது வாழ்த்தினையும் பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வளர்க NORTH LANKA IIT நிறுவனம் வாழ்க புலமைப் பரிசிலூடான கல்விச் சேவை"

பேராசிரியர் க.தேவராஜா.
NORTH LANKA IIT செனற் சபை சார்பாக.
முன்னாள் பீடாதிபதி. முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம். யாழ். பல்கலைக்கழகம்.

**NORTH LANKA IIT செனற் சபை**

பேராசிரியர் க.தேவராஜா.
முன்னாள் பீடாதிபதி.
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்.
யாழ். பல்கலைக்கழகம்.

பேராசிரியர் T. வேல்நம்பி
பீடாதிபதி.
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்.
யாழ். பல்கலைக்கழகம்.

பேராசிரியர் V.P.சிவநாதன்
தலைவர்.
The Department of Economics
யாழ். பல்கலைக்கழகம்.

பேராசிரியர் M.சின்னத்தம்பி
Director, Staff Development Centre,
யாழ். பல்கலைக்கழகம்.

Dr.R. Surenthirakumar
President, Community Medicine,
யாழ். பல்கலைக்கழகம்.

Dr.S.J.M. SAHAJAN
Director, ATI, Jaffna.

அங்கஜன் இராமநாதன்
அமைப்பாளர்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. யாழ்ப்பாணம்.

விரிவுரையாளர் அன்பழகன்
யாழ். பல்கலைக்கழகம்.

(SC-5973)

**NOW UGC Approved Certificate**

IIU has collaborated with IAU listed University – UNEM Costa Rica. There for you can get dual certificates with UGC approval.

எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்

# NORTH LANKA IIT

**#113, NAVALAR ROAD, JAFFNA. Phone: 021 567 7774**

# ACCA

ACCA · Association of Chartered Certified Accountants · ACCA RMC

## க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துத்துறை மாணவர்களுக்குமான ACCA கற்கை நெறிக்கான புலமைப் பரிசில் திட்டம் 2012/2013

ACCA ஆனது சான்றுப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கமாகும். 110 வருட கால அனுபவத்தினை உடைய சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம் பெற்றுத் திகழும் ஓர் நிதியியல் கல்வித் தலைமையாக இது கருதப்படுகின்றது. உலகில் 150,000 அங்கத்தவர்களையும் மற்றும் 450,000 மாணவர்களையும் 90 பிராந்திய மற்றும் கிளைகளினூடாக இயங்கி வருகின்றது. இதனால் தான் உலகில் ஒவ்வொரு 6 நிமிடமும் ஓர் அங்கத்தவர் இத்தகைமையை இட்டு விண்ணப்பிக்கின்றார்.

**I) புலமைப்பரிசில் திட்டம்**

ACCA கற்கை நெறிக்கான க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்துத் துறை மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்கும் வயதெல்லை 25 இற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**II)பரீட்சை முறை**

இரண்டு பரீட்சை வினாத்தாள்களை கொண்டதாக மேற்படி புலமைப்பரிசில்ப் பரீட்சை அமையவுள்ளது.

பொது உளச்சார்பு (1 மணித்தியாலம்)
பொது அறிவு (1மணித்தியாலம்)

**III)உறுதிப்படுத்தல்**

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்தாரி ஒருவர் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டையை அல்லது தபாலக அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் காண்பித்தல் வேண்டும்.

**IV)பெறுபேறுகள்**

பரீட்சையானது ஆவணிமாத இறுதியில் இடம்பெறுவதுடன் புலமைப்பரிசில் திட்டம், பெறுபேறுகள் விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகள் மற்றும் விபரங்கள் தபாலூடாக உரியவர்களுக்கு சேர்ப்பிக்கப்படும். விரிவுரைகள்

பிரிவு I செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும்.(Pre.Result Scheme)2012/2013
பிரிவு II மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும்.(Post.Result Scheme)2012/2013

**V)விரிவுரைகள் நடைபெற ஒழுங்கமைக்கப்பட்ட நிலையங்கள்.**

(I) New mercury Institute of Business studies,
In colloboration with scc computer studies,
43, Arasady Road, Jaffn
Thaddatheru Junction, Jaffna.

(II) Jaffna Technical Institute (JTI)
No.07, Palally Road,
Off sirambiyadi Lane, Jaffna.

(III) ACCA- Centre for Management & Accounting,
Nugavil, Karaveddy south,
Karaveddy.

**(VI)விண்ணப்பிக்கும் முகவரி:-**

வடமராட்சி மாணவர்கள்
Mr.N.G செல்வரட்ணம்
சிரேஷ்ட நிர்வாக அதிகாரி
ACCA நுகவில் கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

ஏனைய மாணவர்கள்
Mr.S நாகராஜா
சிரேஷ்ட நிர்வாக அதிகாரி
இல92/1, சேர்.பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**(VII) புலமைப்பரிசில் தெரிவு முறை**

(I) அதிக புள்ளிகளைப் பெறும் மூவருக்கு ACCA தங்கப்பதக்கம் இலங்கை, மாலைதீவு வதிவிட பிரதிநிதியால் வழங்கப்படும்.
(II) 50 மாணவர்களுக்கு 100% முழுமையான கட்டணச்சலுகை
(III) 100 மாணவர்களுக்கு 75% கட்டணச் சலுகை
(IV) 150 மாணவர்களுக்கு 50% கட்டணச்சலுகை
(V) 200 மாணவர்களுக்கு பதிவுக் கட்டணச்சலுகை (அனைத்தும் மொத்த கட்டணத்தில்)

**(VIII)விண்ணப்ப முடிவுத் திகதி:- 15.07.2012**

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகம் ☐

(i)முழுப்பெயர்:...............................................
(ii) முதலெழுத்துடன் பெயர்...............................................
(iii)தபாலிடல் முகவரி:...............................................
(iv)பிறந்த திகதி:...............................................
வயது - ஆண்டு ☐ மாதம் ☐ திகதி ☐
பால் - ஆண் ☐ பெண் ☐
மின்னஞ்சல் முகவரி:-...............................................
தொலைபேசி இல:-...............................................
தேசிய அடையாள அட்டை /தபாலக அடையாள அட்டை இல:..........................
உறவினரல்லாத இருவரது பெயர்கள்.......................... ..........................
மேலே தரப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

.......................... ..........................
திகதி கையொப்பம்

ACCA
zonal Education Office
No.7,Palally Road,
(Off sirambiyadi Lane) Jaffna.

ACCA
Regional Office
Karaveddy,
Jaffna.

(அ-273)


# வடமராட்சி கிழக்கு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்

## மாவை எம்.பி. உறுதியளிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேரில் சென்று மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மருதங்கேணி, தாழையடி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, முள்ளியான் ஆகிய பகுதி மக்களை அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தம்மை வந்து சந்தித்து தமது குறைபாடுகளை கேட்டறிவதில்லை எனவும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில்லை என்பதும் அம்மக்களின் நீண்ட நாள் கருத்தாகும்.

இந்நிலையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் பூபாலசிங்கம் சஞ்சீவன், குலநாயகம் ஆகியோர் மக்களின் தேவைகளை கேட்டறிந்து எதிர்காலத்தில் உதவிகளை மேற்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்கினை செய்து தருவதாக உறுதிமொழி வழங்கியதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை,சுதுமலை, கோண்டாவில், இணுவில் பிரதேசம், தாவடி, குளப்பிட்டிப்பிரதேசம், தட்டாதெருப்பிரதேசம், கோம்பயன் மணல் பிரதேசம், நாச்சிமார் கோவிலடி, உரும்பிராய்,கோண்டாவில, கந்தர்மடப்பிரதேசம், தட்டாதெரு பிரதேசம், யாழ். நகரம் முழுவதும், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு,கச்சேரி பிரதேசம்,சுன்னாகம், கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# புத்தாக்கக் கண்காட்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி வரையும் தேசிய புத்தாக்குனர் கண்காட்சி நடத்தப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் தமது புத்தாக்கங்களை காட்சிப்படுத்த விரும்பும் எந்தத் துறையைச் சார்ந்த படைப்பாளர்களாயினும் இக்கண்காட்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கண்காட்சியில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் அமைச்சினால் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் அதி சிறப்பான புத்தாக்கங்களுக்கு Dasis விருது வழங்கப்படும்.

இக்கண்காட்சியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் விண்ணப்பிக்க முடியும் எனவும் காட்சிப்படுத்துவோருக்குக்கான தங்குமிட மற்றும் உணவு வசதியும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட எத்துறை சார்ந்த படைப்பாளர்களானாலும் விண்ணப்பிக்க விரும்பினால் அது தொடர்பான மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் நல்லூர், இல-36, செல்லர் வீதியில் அமைந்துள்ள விதாதாவள நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-9)

# முனீஸ்வரவீதி அங்காடி வியாபாரிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட நவீன சந்தைக்கடைகள், முனீஸ்வரன் வீதி அங்காடி வியாபாரிகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (அ-9)

# தாச்சி சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 15 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச்சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மின்னொளியில் கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க தலைவர் செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, ஈ. சரவணபவன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம். யாழ்ப்பாணம் கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன் , யாழ்ப்பாணம் இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ். மாணிக்கசிங்கி, யாழ். வர்த்தக வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ். பி. ரஜீவன், யாழ். மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன், மல்லாகம் வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் க.சுகிர்தன், கொடிகாமம், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க. கனகசபை, சுன்னாகம் வலி. தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி. பிரகாஸ், சுழிபுரம் வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி ஜங்கரன் நாகரஞ்சினி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விறுதிப்போட்டியில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆலடி உடுவில் சிந்து விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

கறையான் புற்றெடுக்க பாம்பு
குடி கொண்டது போல
–தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com


## வடக்கில் நடக்கும் காணி அபகரிப்பு நீதிமன்றின் உதவியுடன் தடுக்க வேண்டும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னதாக, வடபகுதியில் இருக்கக்கூடிய கணிசமான காணிகளை அபகரிப்புச் செய்கின்ற பெரியதொரு திட்டத்தில் அரசும், படைத்தரப்பும் இணைந்து ஈடுபட்டுள்ளமை இப்போது பகிரங்கமாகியுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பதற்குள் இருக்கக்கூடிய நிலப்பிரச்சினை என்பது மிகவும் முக்கியமானதாகும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்ற எல்லைப்படுத்தலை எந்தக் காரணங்களைக் கொண்டும் அரசால் முறியடிக்க முடியவில்லை.

இலங்கையின் வரலாற்று ஆய்வாளர்கள் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் முன்னெழுகின்றபோது,

வடக்குக்கிழக்கு மாகாணங்களின் இணைவு என்பதே இனப்பிரச்சினைக்கான தீர்வின் அடிப்படையாக அமையும்.

இருந்தும் கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைக்கான தேர்தலை நடத்தி அங்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியதன் மூலம் கிழக்கு மாகாண மக்கள், வடக்கு மாகாணத்துடன் இணையவேண்டிய அவசியம் இல்லை என்று கூறுமளவிற்கு கனகச்சிதமாக இராஜதந்திர நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் அரசாட்சியில் தமிழ்த் தரப்பை இருத்தி தமிழர்களுக்கே கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரம் என்பதுபோல காட்டிய இலங்கை அரசு,

இப்போது கிழக்கு மாகாணத்தில் தமிழ்–முஸ்லிம் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதான அரசியல் சிக்கலை உருவாக்கத் தலைப்பட்டுள்ளது.

கிழக்கின் நிலைமை இதுவாக இருக்க, வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக, வட மாகாணத்தில் உள்ள பெருமளவு காணிகளை அபகரிப்புச் செய்வதன் ஊடாக வட பகுதியில் சிங்கள குடியேற்றத்தை – படையினரின் குடும்பங்களை குடியிருத்தும் முயற்சிகள் தீவிரம் அடைந்துள்ளன.

இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமாக இருந்தால், வடக்கு மாகாண சபையில் தமிழ் ஆட்சி ஏற்பட்டாலும் அதனால் எந்த பிரயோசனமும் நிகழப்போவதில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே வடக்கில் திட்டமிட்டு நடைபெறும் காணி அபகரிப்பை கடுமையாக எதிர்க்கும் தார்மீகப் பொறுப்பு தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் தமிழ் மக்களுக்கும் உண்டு.

எனவே இது விடயத்தில் நீதிமன்றின் உதவியை நாடுவது அவசியமானதாகும்.

## குருதிக்கொடைப்பணி

(யாழ்ப்பாணம்)

நாம் எவ்வளவு காலம் வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல. வாழும் காலத்தில் என்ன செய்தோம் என்பது தான் முக்கியமானதாகும் என உரும்பிராய் உயிர்காக்கும் குருதிக்கொடையாளர் கழகம் தெரிவித்துள்ளது.

இக்கழகத்தினூடாக இளைஞர்கள், யுவதிகள் எனப்பலர் இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு தங்களது பங்களிப்பினைச் செய்து வருகின்றனர்.

இதன்படி கழகத்தினால் இரத்த தானம் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையப் பகுதியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் இரத்ததானம் தொடர்பான விழிப்புணர்வுகளையும் செய்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த 3, 27 ஆம் திகதிகளில் மேற்படி கழகத்தின்மூலம் இரத்ததானம் வழங்கிய நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


## உயிர்காக்கும் உன்னத பணியில் ஒன்றிணைவோம் வாருங்கள்

இரத்ததானம் உங்கள் பங்களிப்பு

➢ தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் இரத்ததானம் செய்யலாம்- நான்கு மாதங்களுக்கு ஒருமுறை

➢ உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் இரத்ததான சேவையில் இணைத்தல்

➢ இரத்தவங்கியுடன் தொடர்பு கொண்டு உங்கள் ஊர்களிலும் அலுவலகங்களிலும் நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்குபடுத்தல்

➢ ஊர் விழாக்களின்போது இரத்ததானம் தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும் சுவரொட்டிகளை ஒட்டியும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா
காலம்: 2012, ஜூன் 16, சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 3063


## வீடு கட்டுவதற்கு காணி வழங்குமாறு கோரி வவுனியா அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் ஏறத்தாழ 10 வருடங்களுக்கு மேலாக வாடகை வீட்டில் வசித்து அரச அலுவலகங்களில் கடமையாற்றும் எமக்கு காணிகள் வழங்கப்படாமையால் தொடர்ந்து வாடகை வீட்டிலேயே வசிக்க வேண்டியுள்ளதாக குறிப்பிட்டு வவுனியா அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்து மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வவுனியாவில் ஏறத்தாழ 10 வருடங்களுக்கு மேலாக வாடகை வீட்டில் வசித்து அரச அலுவலகங்களில் கடமையாற்றி வரும் எமக்கு வவுனியா பிரதேச செயலகத்தினால் வவுனியாவில் கடமையாற்றும் வீடு கட்ட காணி அற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வீடு கட்ட காணி வழங்கும் திட்டத்தின் கீழ் காணி வழங்கப்படாமையால் நாம் தொடர்ந்தும் வாடகை வீட்டிலேயே இருக்க வேண்டியுள்ளது.

சொந்தக் காணியுள்ளோருக்கு வீட்டுக்காணி வழங்கப்பட்டுள்ளதோடு வீடு கட்ட குறைந்த வட்டியில் கடனும் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் காணி வழங்கப்படும் என வவுனியா பிரதேச செயலாளரால் தொடர்ந்தும் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இத்திட்டத்தினூடாக காணி வழங்கப்பட்டு ஒரு வருடங்களுக்கு மேலாகியும் எமக்கு காணி வழங்கப்படும் என வவுனியா பிரதேச செயலாளர் உறுதியளித்து பல மாதங்களாகியும் இன்றுவரை எமக்கு காணிகள் வழங்கப்படவில்லை. இந்நிலையில் கட்டடப்பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துச் செல் லும் நிலையும் காணப்படுகின்றது.

ஏற்கனவே சொந்தக் காணி, வீடு உள்ள பலருக்கு இத்திட்டத்தினூடாக காணி வழங்கப்பட்டமையால் அவர்கள் இன்றுவரை இக் காணிகளில் வீடு கட்டாமல், காணியைப் பராமரிக்காமல் உள்ளனர். இவர்களை காணிக்குள் வீடு கட்டுமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

ஆனால் வீடு கட்ட காணி கோரும் எம்மை ஏன் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றனர். எனவே வவுனியாவில் நீண்ட காலமாக வசித்து வரும் அரச உத்தியோகத்தர்களாகிய எமக்கு வீடு கட்ட காணி வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-266)

## ஒருகோடி பஞ்சாட்சர ஜெபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஒரு கோடி பஞ்சாட்சரஜெபம் நடைபெறவுள்ளது.

அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து பஞ்சாட்சர ஜெபம் செய்து ஆவாகனம் செய்யப்பெற்ற கும்பத்தில் பூவும் நீரும் சாத்தி எண்ணிக்கையைப் பதிவேட்டில் பதிந்து செல்லுமாறு அகில இலங்கைத் திருமுறை மன்றம் அறிவித்துள்ளது. (அ-9)

## அதிபர்களுக்கான விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு கோட்டக் கல்வி அதிகாரிகளும் அதிபர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபையின் கோண்டாவில் பொது நூலகத்தினால் நடத்தப்படவுள்ள நூலக வலுவூட்டல் நிகழ்வும் குருதிக்கொடையாளர் தினமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் பொதுநூலக மண்டபத்தில் சனசமூக உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

எனவே குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் பங்கேற்று உயிர்காக்கும் உன்னத கொடைக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சொந்தக்காலில் நில்லுங்கள்



ஒருவனுக்கு தன்னம்பிக்கையே அடிப்படை. அது இல்லாதவன் தெய்வபக்தி இல்லாத நாத்திகனைப் போன்றவன்.

விடாமுயற்சி மட்டும் நம்மிடம் இருந்துவிட்டால் நம்மால் சாதிக்கமுடியாத செயல் என்று எதுவுமேயில்லை.

என்னால் முடியாது என்று ஒருபோதும் சொல்லக் கூடாது. எல்லாவற்றையும் சாதிக்கக்கூடிய வல்லமை நம்மிடம் இருக்கிறது.

சுயநலம் என்பது சிறிதும் மனதில் இருப்பதுகூடாது. அதைத்தூர எறிந்துவிட்டு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.

நீங்கள் சிங்கம் போன்றவர்கள். செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளிவிட்டு உற்சாகத்துடன் செயலாற்றுங்கள்.

தன்னைத்தானே தாங்குபவனாக சொந்தக்காலில் தலைநிமிர்ந்து நிற்கும் பலமுள்ளவனாக செய்யவல்ல கல்வித்திட்டம் நமக்குத்தேவை.

உயர்ந்த இலட்சியங்களை மனதில் உருவாக்குங்கள். எப்போதும் அதை அடைவதற்கான சிந்தனையில் ஈடுபடுங்கள்.

சிந்திப்பதைச் செயற்படுத்தும் துணிவையும் மனவலிமையையும் தியானத்தின்மூலம் நம்மால் பெறமுடியும்.

# உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் உதைபந்தா ட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிக ழ்வும் நாளை ஞாயிற் றுக்கிழமை பி.ப. 4 மணி க்கு கழக மைதானத்தில் கழகத் தலைவர் வி.விஜய குமார் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித் துறை பிரதேச செயலக செயலாளர் ஆர்.ரி.ஜெயசீ லன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இப் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர் த்து வதிரி பொம்மஸ் அணி மோதவுள்ளது. (3-24)

## புதிய காதலியுடன் சஹீர்கான்



இந்திய வேக பந்துவீச்சாளர் சஹீர் கான் தனது புதிய தோழி யான வீடியோ ஜாக்கி ராமோனா அரினா வுடன் ஜோடியாக உலா வருகிறார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சா ளராக மிரட்டும் சஹீர்கானுக்கு இன் னும் திருமண மாகவி ல்லை இதனால் சஹீர் கானுடன் நீண்ட கால மாக பழகி வந்த இஷா ஷர்வானியை விரை வில் திருமணம் செய்து கொள்வார் என்று செய் திகள் வெளியானது.

இந்நிலையில் தற் போது சஹீர்கானுக்கு ஒரு புதிய தோழி கிடைத்துள்ளார். அவர் வேறு யாரும் அல்ல. முன்னாள் வீடியோ ஜாக்கியான ராமோனா அரினாதான். சஹீர்கான்- அரினா ஜோடியை அவ்வப்போது மும்பையில் உள்ள கடைத்தெருக்களில் உலா வருவதை காண முடிகிறது.

இருவரின் நட்பின் ஆழத்தை தெளிவுபடுத்தும் வகையில் ராமோனா அரினா தனது டுவிட்டர் தளத்தில் சினிமா இயக்குநர் அபிஷேக் கபூரிடம் நான் இப்போது சஹீர்கானுடன் தான் இருக்கிறேன்.நீங்கள் இல்லாதது வருத்தம் அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து ராமோனா அரினாவிடம் கேட்டதற்கு தன்னை குறித்து வெளியாகும் செய்திகளை அவர் மறுக்கவில்லை. அதேநேரம் எந்த கருத்தும் கூற விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

## சர்ச்சையில் சிக்கிய ஸ்ரீசாந்த்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான ஸ்ரீசாந்த் அடிக்கடி சர்ச் சையில் சிக்கிக் கொள்வது அவரது வாடி க்கையாக போய்விட்டது. காயம் காரணமாக இந்திய அணியில் தற்போது விளையாடாமல் இருக்கும் ஸ்ரீசாந்த் மீண் டும் சர்ச்சையில் சிக்கி உள்ளார். விமானத்தில் பய ணம் செய்த அவர் சக பயணி, விமான சிப்பந்திக ளுடன் தகராறு செய்ததாக தகவல் வெளி யாகி உள்ளது.



ஸ்ரீசாந்த் பெங்களூரில் இருந்து டில்லி புறப்பட்ட விமா னத்தில் பயணம் செய்தார். அவருக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை நம்பர் 29 ஏ ஆகும். இந்த இருக்கை அவசர நுழைவு வாயில் அருகே இருப் பதாக கூறி ஸ்ரீசாந்த் அந்த இருக்கை யில் உட்கார மாட்டேன் என்று கூறி விமான சிப்பந் திகளுடன் தகராறு செய் தார்.

எமர்ஜென்சி நுழைவுவா யில் அருகே உட்கார முடி யாது என்று கூறி ஸ்ரீசாந்த் விமான சிப்பந்தியு டன் தகராறு செய்தார்.

அவரால் விமானம் புற ப்படுவதில் 15 நிமிடம் தாமதம் ஏற்பட்டது. இதனை மறுத்த ஸ்ரீசாந்த் கூறுகையில், நான் யாரிடமும் தக ராறு செய்ய வில்லை. விமானத்தி ல்யாரையும் திட்ட வில்லை. இந்திய அணிக்காக விளையாடுகிற எனக்கு பொது இட த்தில் எப்படி நட ந்து கொள்வது என்பது பற்றிய விதிமுறை தெரி யும் என்றும் தன் மீது யார் இந்தக் குற்றச்சாட்டைகூறி னார்கள் என்றே தெரியாது என வும் தெரிவித்தார்.

மேலும் கட ந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியின் போது ஸ்ரீசாந்த் தவறாக பேசியதால் ஹர்பஜன் சிங்கிடம் கன்னத்தில் அறை வாங்கினார். பின்னர் ஹர்பஜன் தனது அண்ணன் போன்றவர் என்று கூறினார் என்பது குறிப்பிடத் தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்....

## உதைபந்தாட்டப் போட்டி

Y.M.C.A. அனுசரணையில் சக்கோட்டை சென்.சேவியர் விளை யாட்டுக் கழகத்திற்கும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழ்கத்திற்கும் இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் அல் வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியிலே சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. அரை இறுதிக்கு தகுதி பெற்றது.





யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 15 ஆவது ஆண்டு தாச்சிப்போட்டி இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கைதடி குமரநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டு கழக அணியை எதிர்த்து ஆலடி உடுவில் சிந்து விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரு அணி வீரர்களையும் படங்களில் 'காணலாம்.

## ஸ்ரீலங்கா பிரிமியர் லீக்

# மீண்டும் பகிஷ்கரித்தது இந்தியா


சிறிலங்கா பிரிமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்) போட்டிகளில் இந்திய வீரர்களை விளையாட அனுமதிக்குமாறு சிறிலங்கா கிரிக்கெட் விடுத்த கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மீண்டும் நிராகரித்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இப் போட்டிகளை நடத்த சிறிலங்கா கிரிக்கெட் திட்டமிட்டுள்ளது. எஸ்.எல்.பி.எல் போட்டிகளில் விளையாட தனது வீரர்களை அனுமதித்தால், ஏனைய நாடுகளால் ஏற்பாடு செய்யப்படும் இருபது-20 போட்டிகளிலும் விளையாட அவர்களை அனுமதிக்க வேண்டியிருக்கும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கருதுகின்றது.

அத்துடன், இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் மாதங்களில் இறுக்கமான சுற்றுலா அட்டவணையை கொண்டுள்ளது. இலங்கையில் ஒருநாள் மற்றும் இருபது-20 சுற்றுப் போட்டிகளில் இந்திய அணி பங்குபற்றவுள்ளது. அதன்பின் சொந்த மண்ணில் நியூசிலாந்துடன் இரு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

அவர்கள் (சிறிலங்கா கிரிக்கெட்) எம்மை அணுகினார்கள் ஆனால் எம்மால் எமது வீரர்களை அனுப்பமுடியாதிருக்கும் என இந்திய கிரிக்கெட் சபை அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

தேசிய அணியில் இடம்பெறாத இந்திய வீரர்களை எஸ்.எல்.பி.எல் போட்டிகளில் சேர்த்துக் கொள்ளும் நம்பிக்கையுடன் சிறி




லங்கா கிரிக்கெட் உள்ளது.

எனினும் இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள இந்திய கிரிக்கெட் சபை தயங்குகிறது. எனினும் இம்முறை திட்டமிட்டபடி இச்சுற்றுப் போட்டியை முன்னெடுக்கவுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் அதிகாரி யொருவர் கூறினார்.

கடந்த வருடம் இப்போட்டிகளை ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா கிரிக்கெட் திட்டமிட்டது. எனினும் இந்திய வீரர்கள் பங்குபற்றாத நிலையில் அத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

எஸ்.எல்.பி.எல் போட்டிகளின் பின்னால் ஐ.பி.எல் முன்னாள் தலைவர் லலித் மோடி இருப்பதாக சந்தேகித்தமையும் இப்போட்டிகளுக்கு ஆதரவளிக்க இந்திய கிரிக்கெட் சபை மறுத்தமைக்கான காரணமாகும்.

---

## சிறப்பு இசையரங்கம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் சிறப்பு இசையரங்க நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரபல இசைக் கலைஞர் வர்ண ராமேஸ்வரனின் இசைக் கச்சேரியும் இடம்பெறும் என மன்ற நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ந-6)

---

## சவுதியில் சித்திர ...

எஜமான்களினால் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில், சவூதியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த பணிப் பெண்களில் ஒரு தொகையினரே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இத் தொகைப் பணிப் பெண்கள் மீண்டும் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை சவூதியில் உள்ள இலங்கைத் தூதரகமும் சவூதி அரசாங்கமும் இணைந்து மேற்கொண்டதாகவும்,

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் பலருக்கு சம்பளம் எதுவும் கிடைக்காத நிலையிலேயே அவர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்று வேலை வாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் மேலும் கூறினார். (ந-8,11)

---

# இலங்கை-பாக். இன்று மோதல்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 2 இருபது-20 போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி வருகிறது.

இதில் முதலாவது இருபது-20 போட்டியில் இலங்கை அணியும் இரண்டாவது இருபது-20 போட்டியில் பாகிஸ்தானும் வெற்றி பெற்று தொடர் சமனிலையானது.

இந்நிலையில் இரு அணிகளும் மோதும் முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணியும், இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணியும் வெற்றி பெற்றிருந்த நிலையில் 3-வது ஒரு நாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், நான்காவது ஒருநாள் போட்டி இன்று மாலை 2.30 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளதுடன்,

இதேவேளை மற்றைய ஒருநாள் சர்வதேசப் போட்டி எதிர்வரும் 18-ம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

**கைவிடப்பட்ட போட்டிக்கு பதிலாக ஒரு போட்டி**

இரு அணிகளுக்கும் இடையிலான 3-வது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கையை அடுத்து மேலதிக ஒரு நாளை ஒதுக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை முடிபு செய்துள்ளது.

அத்தோடு 3-வது போட்டிக்கான போட்டி நுழைவுச் சீட்டுகளை கொள்வனவு செய்தவர்கள் அதே நுழைவுச் சீட்டை பயன்படுத்தி 5-வது ஒருநாள் போட்டியைப் பார்வையிடலாம் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# நான் ரஜனி ரசிகன்



டில்லியில் டான்ஸ் ரியாலிட்டி ஷோ ஒன்று நடக்க இருக்கிறது. இதில், சினிமா உள்ளிட்ட பல துறைகளிலும் உள்ள பிரபலங்கள் பலர் கலந்து கொள்கின்றனர். இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜெயசூர்யாவும் இதில் பங்கேற்கிறார்.

டில்லியில் அவர் நடன பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். ஓய்வுக்கு இடையே ஜெயசூர்யா அளித்த பேட்டி வருமாறு,

ரஜனிகாந்த் ரசிகனில் நானும் ஒருவன். அவர் நடித்துள்ள சில படங்களை பார்த்திருக்கிறேன். அவரது நடிப்பும், ஸ்ரைலும் எனக்கு பிடிக்கும். ஹிந்தி சினிமா உலகில் மாதுரி தீட்சித்தை எனக்கு மிகவும் பிடிக்கும். ஹிந்தி சினிமா பார்த்தில்லை. ஆனால் மாதுரி தீட்சத் நடித்த ஒரு படம் பார்த்தி ருக்கிறேன். படத்தின் பெயர் ஞாபகமில்லை. அந்த படத்தில் அவர் சிறப்பாக நடனம் ஆடியுள்ளார். அவர் ஒரு சிறந்த நடனக் கலைஞர்.

எனக்கு நடனம் ஆடவே தெரியாது. இப்போதுதான் நடனம் ஆட பயிற்சி எடுக்கிறேன். நடனம் என்பது கடினமான மற்றும் வித்தியாச மான பணியாகும். ரியாலிட்டி ஷோவில் என்னால் இயன்ற அளவுக்கு சிறப்பாக ஆட முயற்சி செய்வேன். பயிற்சி வகுப்பை நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

---

# கோத்தாவின் உத்தரவிலேயே...

இது தொடர்பாக லங்கா நியூஸ் இணையத் தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி காலை 7.30 மணியளவில் நந்திக் கடல் அருகே பாலச்சந்திரன் இராணுவத்திடம் சரணடைந்திருந்தார். விஜயபாகு காலாட் படைப்பிரிவின் சார்ஜன்ட் முத்து பண்டா தலைமையிலான எட்டுப் பேர் கொண்ட குழுவிடமே பாலச்சந்திரன் சரணடைந்திருந்தார்.

தனது தந்தையான விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முதல் நாள் இரவு நடந்த சண்டையில் கொல்லப்பட்டு விட்டதாகவும் அவரின் உடல் நந்திக்கடல் அருகே மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இராணுவத்திடம் தெரிவித்திருந்தார்.

இத் தகவலை சார்ஜன்ட் முத்துபண்டா, 4-வது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் அதிகாரியான லெப்டினன்ட் நாலகவிடம் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து வேறு சில இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் அவர்கள் இறங்கினர்.

அத்துடன் இராணுவப் படைப்பிரிவின் உயர் அதிகாரியான லெப்.கேணல் ரோகித அலுவிகாரவிடம், பிரபாகரனின் மகன் எனக் கூறப்படும் ஒருவர் தம்மிடம் சரணடைந்துள்ள தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இத் தகவல் பிரிகேட் தளபதியான மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவிற்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண மற்றும் அதிகாரிகளுடன் உடன் சென்ற பாலச்சந்திரன் மறைத்து வைக்கப்பட்ட தனது தந்தையின் உடலைக் காட்டியதாகவும் தொடர்ந்து பாலச்சந்திரனை லெப்.கேணல் கமமே தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டதாகவும் லங்கா நியூஸ் வெப் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

மேலும், தானும் தனது தந்தையும் ஒரு படகிலும், தாயும் சகோதரியும் வேறு ஒரு படகிலும் தப்பிச் செல்ல முயன்றதாகவும் ஆனால் இதன் போது ஏற்பட்ட துப்பாக்கிச் சமரில் தனது தந்தை கொல்லப்பட்ட போதும் தனது தாய்க்கும் சகோதரிக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும் பாலச்சந்திரன் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இத் தகவல்களை மேஜர் ஜெனரல் குணரட்ண பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் தெரிவித்ததாகவும் இதனை கோத்தபாய விநாயகமூர்த்தி முரளிதரனிடம் (கருணா) தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

பாலச்சந்திரனின் வயது காரணமாக அவர் நீதிமன்றத்தால் தண்டனையின்றி விடுதலை செய்யப்பட கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் பாலச்சந்திரன் எதிர்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராக வரக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் எனவே அவரைக் கொலை செய்வதே நல்லது எனவும் கருணா, கோத்தபாயவிடம் தெரிவித்ததாக வும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாலச்சந்திரனை இரகசியமான முறையில் கொலை செய்து அவரின் உடலை அழித்து விடும்படி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவிற்கு கோத்தபாய உத்தரவிட்டதாகவும் இத் தகவல்களை இராணுவ உயரதிகாரி ஒருவரே தெரிவித்துள்ளதாகவும் லங்கா நியூஸ் இணையத் தளம் செய்தியில் தெரிவித்துள்ளது. (ந-8,11)

---

## மாவீரர் ...

இராணுவத்தினர் சில மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தனர். அந்த வீடுகளுக்கு குடியேறிய மக்கள் முதன் முதலில் ஆணிகளை அடித்து சில படங்களை கொழுவினார்கள்.

அந்தப் படங்கள் யாருடையவை தெரியுமா! அரச படைகளுக்கு எதிராக யுத்தம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரிச்சீருடை அணிந்த மாவீரர்களின் படங்கள்.

அவர் எங்களுக்கு எதிராக யுத்தம் செய்த பொழுதும் அவர்கள் தமிழ் மக்களின் பிள்ளைகள் என்பதை எப்படி மறுப்பது என்று குறிப்பிட்ட பிரிகேடியர் ரேணுகா ரொவல் அதனை எந்த இராணுவ உறுப்பினரும் தடுக்கக் கூடாது என்று தான் உத்தரவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். (ந-8-11)

---

## பிரஜைகளின் ...

கராலய பேச்சாளர் சாரா மேன் கூறினார்.

பொதுநலவாய வர்த்தக பேரவையின் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை குறித்து பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பதிலளிக்கையில், இந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை அரசாங்கத்தின் தீர்மானமல்ல எனக் குறிப்பிட்டார்.

---

## பொருளாதாரம் ...

நிலையில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சிறந்த பொருளாதார திட்டத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் அதிகளவில் செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ந-8-11)

---

## இலங்கைத் ...

நடக்கும் கொடுமைகளைச் சொல்ல தமிழர்கள் பயப்படுகிறார்கள். அந்த அளவுக்கு இலங்கை இராணுவம் அவர்களை மிரட்டி வைத்துள்ளது.

தமிழர்கள் புனரமைப்புக்கு இந்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்துள்ளது. அந்த பணத்தில் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளதைத் தவிர, மற்ற அடிப்படை வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை.

தமிழர்கள் வீடு கட்ட 3 இலட்சம் ரூபாய் கொடுக்கின்றனர். அது போதுமானதாக இல்லை. தமிழர்கள் வசிக்கும் பகுதியில் 89 ஆயிரம் பெண்கள் தங்களது கணவர் இறந்து விட்டாரா, அவர்கள் கதி என்ன வென்று தெரியாமல் தவிக்கின்றனர். நாங்கள் தமிழ் எம்.பிக்கள், ஆளும் கட்சி எம்.பிக்களை சந்தித்துப் பேசினோம்.

இலங்கையில் புத்த வழிபாட்டுக்கு மட்டும் முக்கியம் அளிக்கின்றனர். தமிழர்கள் அவதிப்படும் கொடுமைகளை பற்றி புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துள்ளோம். நாங்கள் சேகரித்த ஆவணங்களை வைத்து பார்வர்ட் பிளாக் செயற்குழுவில் விவாதித்து அறிக்கை தயாரிக்கப்படும். அந்த அறிக்கையை மிக விரைவில் இந்திய அரசிடம் வழங்குவோம். நாடாளுமன்றில் இந்தப் பிரச்சினையை எழுப்புவோம்.

இவ்வாறு அவர்கள் தமது பேட்டியில் தெரிவித்துள்ளனர்.ள (ந-8,11)

# அதிகார பலத்தை அடைய...

இலட்சம் மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர்.

இந்தியாவில் 1983 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தென்னிந்திய முகாம்களில் 68 ஆயிரம் மக்கள் அகதிகளாக இருப்பதாகவும் மேலும் முகாம்களுக்கு வெளியே குறைந் தளவு ஒரு இலட்சம் மக்களாவது வாழ்வதாகவும் மதிப் பீடுகள் தெரிவிக்கின்றன.

அதைவிட 25 ஆண்டுகளில் திருமணம் மற்றும் இயற்கையான வளர்ச்சி மதிப்பிடப்பட்டதாக இல்லை. இம் மக்கள் இலங்கையின் தமிழ்க் குடிமக்கள்.

மேற்குறித்த காரணங்களினாலும் இலங் கையில் தமிழ்மக்களின் குடிசன எண்ணிக்கை பெரு வீழ்ச்சியடைந்துள்ளது. அரச அதிகார பீடத் தின் நிகழ்ச்சிநிரலில் தமிழ்மக்களின் குடிப் பரம் பலை வீழ்ச்சியடையச் செய்வதும் பலவீனப் படு த்துவதும் முக்கியம் பெற்றுள்ளது. அதை விட தமிழ் மக்களே தங்களில் கணிசமானவர்கள் குடிப் பரம்பலை விருத்தி செய்வதிலும் பதிவு செய்வதி லும் அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். அது போலவே பதிவு செய்யத் தகுதியுள்ள வாக்காளர் களும் பதிவு செய்வதில் கணிசமானோர் அக்க றையற்றிருக்கிறார்கள்.

இதனால் 12.5%மாக இருந்து வந்த இலங் கைத் தமிழர் வீதம் 5% வரை வீழ்ச்சியடையும் சாத்தியம் ஏற்படுமென எச்சரிக்கப்பட்டுள் ளனர்.

11 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்து வந்த யாழ் தேர்தல் மாவட்டம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆறு உறுப்பினரைத் தேர்வு செய்யவேண்டி வரலாம். அவ்வாறே அரசியல் அதிகாரபலம், நிதி ஒதுக்கீடுகள் ,பல்கலைக்கழக அனுமதி, புலமைப் பரிசில் தேர்வுகள், வேலை வாய்ப்புக்கள் போன்ற தொடர்புள்ள பல துறை களிலும் வீழ்ச்சியேற்படும்.

எனவே ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் உடன டியாக தனது குடியுரிமை மற்றும் வாக்குரிமை யைப் பதிவு செய்வதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எமது அணியில் பிரதிநிதித்துவம் வகிக் கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள் ளூராட்சி மன்ற உறுப் பினர்கள், கட்சி அமைப் பின் உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பகுதிகளில் வீடு வீடா கச் சென்று வாக்கா ளர்களைப் பதிவு செய்வதில் உடன் கவனம் செலுத்தி ஈடு படுமாறு பணிவன் புடன் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கி றேன் என அவரால் விடுக் கப்பட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ந-6)

யாழ் நகரில் .....
உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் ......
சாந்தம் வைத்தியசாலை
வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!
ECG, Scanning வசதி
Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.
விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!
வெகுவிரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!
இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577

மணல்
விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 21,000/-
தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462
(8638)

## மறு அறிவித்தல் வரை விரிவுரைகள் இடம்பெறாது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்ட பின் படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்படும் அனைத்து கற்கைநெறிகளுக்குமான விரி வுரைகளும் மறுஅறிவித்தல்வரை நடை பெறாது என பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்க ளின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடித்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ந)

## யாழ்.மாநகர சபை ஊழியர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை ஊழியர் ஒருவர் தூக் கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று காலை மீட்கப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் இருப்புலம் வைரவர் ஆலய பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னராசா தபேந்திரன் (வயது 46) என்பவரே சடலமாக மீட்கப்பட்டதாக மானிப் பாய் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது. இவரது மரணம் தொடர் பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ந-11)

## பெறாமகன் ...

சடலமானது பிரேத பரிசோதனைக்காக வல்வெட்டித்துறை பொலிஸாரினால் நேற்று இரவு 8 மணியளவில் யாழ். போதனா வைத்தி யசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-11)

## சமாதானத்தை ...

எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நீதியும் சமாதானமும் அரசினால் சீர்குலைக்கப்பட்டு வருகின்றன. அதற்கு அரசால் அரங்கேற்றப்பட்டு வருகின்ற கடந்த காலச் சம்பவங்களே சான்றாகும். இலங்கை விமான சேவை நிறுவனத்தின் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்கவின் வீட்டிலிருந்து 11 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பெறுமதியான பணத்தையும் சொத் துக்களையும் கொள் ளையர்கள் கொள் ளையடித்துச் சென் றுள்ளனர்.

எமது நாட்டு நீதிக்கமைய ஒருவர் இரண்டாயிரம் அமெரிக்க டொலர் பணத்தை மட் டுமே தம்வசம் வைத்திரு க்க முடியும். இரண் டாயிரம் அமெரிக்க டொலருக்கு மேல் பணம் வைத்திருந்த தால்தான் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுனதில கரத்னவின் தாயா ரைப் பொலிஸார் கைது செய்தனர். ஆனால், நிஷாந்த விக்கிரமசிங்கவின் வீட்டிலிருந்து 11 ஆயி ரத்து 500 அமெரிக்க டொலர் பணமும் சொத்துக்களும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.


ஏன் இவருக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை? அரசிலுள்ளோர் சட்ட விதிகளைமீறிச்செயற் படும் போது, அந்தச் சட்டத்தையே தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்கின்றனர்.

தமது முழு அதி காரத்தையும் பயன் படுத்தி மாகாண சபைத்தேர்தல்களில் வெற்றி பெறுவதற் காக அவற்றைக் கட்டம் கட்டமாக நட த்த அரசு திட்டமிடு கின்றது. கிழக்கு, சப்ரக முவ, வடமத் திய மாகாண சபைத் தேர்தல் செலவிற் காக 150 கோடி ரூபா யை அரசு ஒதுக்கி யுள்ளது.

இது யாருடைய பணம்? ஏன் இந்தப் பணத்தை இவ்வாறு நாசம்செய்கின்றனர்? இறுதியில் இந் தப் பாரிய சுமை அனைத் தையும் அப்பாவி மக் களின் தோள்களிலே யே அரசு சுமத்தும்.

இவ்வாறுஐ.தே.க. நாடாளுமன்ற உறுப் பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரி வித்தார். (ந-8,11)

## நன்றி கூறுகிறோம்



கடந்த 13.06.2012 புதன்கிழமை முதல் காணாமல் போயிருந்த 87 வயது முதியவர்

**நடராஜா நாகலிங்கம்**

அவர்கள் நேற்று 15.06.2012 வெள்ளிக்கிழமை மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அவரை கண்டறிவதற்கு உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயபூர்வ நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
இல. 333/2, ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

(8652)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்தனநங்கை கிருஷ்ணன் (சந்திரா)



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிட மாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சந்தனநங்கை கிருஷ்ணன் (சந்திரா) கடந்த 14.06.2012 வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் கிருஷ்ணன் (உரிமை யாளர்-அமுல் கிறீம் ஹவுஸ், யாழ்ப் பாணம்) அவர்களின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ் சென்றவர்களான முருகப்பர் - சின் னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் துஸ்யந்தன் (முகாமை யாளர், செலிங்கோ இன்சூரன்ஸ் பொது பிரிவு, மானிப்பாய்க் கிளை), வாசுகி (ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெகன் (லண்டன்), மீரா (செயலாளர், உலக சுகாதார நிறுவனம் WHO யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், யசோ, பேராசிரியர் ரவிராஜன் (தலைவர், பௌதிகவியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), நகுலினி (லண்டன்), Dr. தயாபரன் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிசானி, அனுகாஷினி, ஆகாஷ், சர்வேஷ், ரம்யன், ஆதவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சியாமளா (ஜேர்மனி), கிருஷா (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலவீரசிங்கம் (ஜேர்மனி), சண்முகதாஸ் (பிரான்ஸ்), நடேசன், சதாசிவம், பொன்னம்மா, ராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5/4, றக்கா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
TP: 021 222 8876

(8650)

மாதம் 50,000 ரூபா வருமானத்துடன்...
ஹோட்டல் பயிற்சிநெறி & தொழில்வாய்ப்பு
உணவு, தங்குமிட வசதி இலவசம்!




பயிற்சிநெறி முடிவில்
University of East London, Skills Malaysia Invite City & Guilds (UK), AETS (Australia) சான்றிதழ்களுடன்.
மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, சீனாவில் வேலைவாய்ப்பு! (With Work Permit)
- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணையலாம்.
- கணவன், மனைவி ஒன்றாகச் செல்ல முடியும்.
- விண்ணப்பத்து ஒரு மாதத்தில் விசாவுடன் பயணம்.
- நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, பயிற்சிநெறி முடியும் வரையில் தொடர்பிலிருப்போம்.

1ம் அணி ஜூலையில் பயணம்!
முதல் 10 பேருக்கு விமானப் பயணச்சீட்டு முற்றிலும் இலவசம்
மலேசிய பிரதிநிதி Ryanஐ நேரில் சந்தித்து அனுமதி பெறுங்கள்
ஜூன் 15, 16 தம்பா ஹொட்டேல், வவுனியா
ஜூன் 17, 18 ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்
காலை 10 மணி - கருத்தரங்கு
11.00 - 3.00 மணி - Interview & Spot Admission
மட்டு, திருமலை, கொழும்பு விண்ணப்பதாரிகள் வவுனியா கருத்தரங்கில் பங்குபெற்றலாம்!
பெற்றோர் / பாதுகாவலருடன் கலந்துகொள்ளவும்
S MEDIA
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.